Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 45
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க பங்குனி 13 ஜுல்ஹஜ் 26 செவ்வாய்க்கிழமை (26-3-68)

## இந்தி கிளர்ச்சியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு

### தமிழக அரசு முடிவு

### கச்சதீவு பற்றி அண்ணா

சென்னை, மார்ச் 25

தமிழகத்தில் 1965-ம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது கொல்லப்பட்டவர்களினதும், காயப்பட்டவர்களினதும் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு அளிப்பது பற்றித் தமிழக அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாகத் தமிழக முதல் மந்திரி திரு சி. என். அண்ணாதுரை, இன்று தமிழக கீழ் சட்ட சபையில் கேள்வி நேரத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

பொலிசாரின் துப்பாக்கிச் சூடு நியாயமா அல்லவா என்பது பற்றி விவாதிக்காது, பாதிக்கப்பட்டோர் குடும்ப நிலையை மட்டுமே தமிழக அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளதாகவும் முதல் மந்திரி கூறினார்.

(8-ம்பக்கம் பார்க்க)

# 42 யாத்திரீகர்கைதானவர்கள் விசாரணையின்பின் சிலர் விடுதலை

## கண்காணிப்புச் செய்த படையினரும் திரும்பினர்

யாழ்ப்பாணம். செவ்வாய்

கச்சதீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்களில் நேற்றுமட்டும் சுமார் 42 பேர் சட்டவிரோதமாக இங்கு வந்தவர்கள் என பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்கள். காரையூர், நெடுந்தீவு, மாவடித்துறை பெரியதுறை ஆகிய இடங்களில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

இவர்கள் பற்றிய பூரண விசாரணையை கள்ளக்குடியேற்றத்தடுப்பு பகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு லயனல் சேனநாயக்காவும் இன்ஸ்பெக்டர் கந்தையாவும் நேற்று நடத்தினார்கள் கைது செய்யப்பட்டவர்களில் சிலர் நேற்றுமாலை இலங்கையரென நிரூபிக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்,

இதுதவிர காரையூர் தடுப்பு முகாமில் மட்டும் கடந்த இரு தினங்களில் பல சாரங்களும் இந்தியச்சேலைகளும் சுங்கப்பகுதியினரால் பறிமுதல் செய்யப்பட்டன. இரண்டு சாரங்களை ஒன்றின்மேல் ஒன்றாக அணிந்திருந்த ஒரு வாலிபரின் இரு சாரங்களும் சுங்கப் பகுதியினரால் பறிமுதல் செய்யப்பட்டன. சேலைப் பைகளுக்குள் அடைத்துக் கொண்டுவந்த 13 சேலைகளும் நேற்றுக்காலை சுங்கப் பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன.

இங்கிருந்து 3 நாள்தேவைக்கென பிரயாணிகள் கொண்டுசென்ற உப உணவுப் பொருட்களே அங்கு விற்பனைப் பொருட்களாக மாறியதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இங்கிருந்து கொண்டுசெல்லப்பட்ட 'நெஸ்பிறே' 'ஹோர்லிக்ஸ் ஆகியன ஒவ்வொன்றும் 15 ரூபாவரை விற்கப்பட்டதாகவும் பியர் குடிவகை போத்தலொன்று 6 ரூபாவாகவும் சாராயப் போத்தல்கள் ஒவ்வொன்றும் சுமார் 18 ரூபாவரையும் விற்கப்பட்டதாகவும் இவர் தெரிவித்தார். இது மட்டுமன்றி மலிபன் பிஸ்கட் பக்கட்டுகள் பாக்கு ஆகியனவும் இங்கிருந்து கொண்டு சென்று விற்கப்பட்டதாகவும் பொலிசாருக்குதெரிய வந்துள்ளது.

இம்முறை கச்சதீவுத் திருநாளில் இலங்கை ஒருரூபா வெள்ளிநாணயம் கூடுதலாக இந்தியாவுக்கும்போய்ச்சேர்ந்ததாம். இதனைருசுப் படுத்தக்கூடிய சில சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தவர்

## மருந்து வாங்குவதற்கு கொழும்பு செல்ல வேண்டிய நிலை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்திலுள்ள மருந்துக் கடைகளில் சில முக்கிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், சிலர் இம் மருந்துகளை வாங்குவதற்காக, கொழும்பிற்கு செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்.

கண் வைத்தியம் சம்பந்தப்பட்ட சில மருந்துகளும் சில வில்லைகளும், இங்கு பெற முடியாமலிருக்கிறது.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலும் இம் மருந்துகள் இல்லாததால், டாக்டர் மருந்தின் பெயரை நோயாளிகளிடம் எழுதிக்கொடுத்து வெளிக்கடையில் வாங்கும்படி கூறினுர்களாம்.

வெளிக் கடைகளிலும் இம்மருந்தை பெறமுடியாத நோயாளிகள் மிகவும் சிரமப்படுவதாக தெரியவருகிறது. சில மருந்துகள் குறிப்பாக குளிகைகள், சில்லரையாக கூடிய விலைக்கு விற்கப்படுவதாகவும் நோயாளி ஒருவர் தெரிவித்தார்.

## பாலிமெண்டில் ஒரு தமிழ் குரலும் ஒலித்தது

கொழும்பு, திங்கள்

நேற்று பார்லிமெண்டில் தனிச்சிங்களக் குரல்களுக்கு மத்தியில் ஒரு தமிழ்க் குரல் மட்டும் ஒலித்தது.

அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சியினர் கொண்டு வந்திருந்த நம்பிக்கையில்லாத்தீர்மான தையொட்டி நடைபெற்ற விவாதத்தில் உரைநிகழ்த்திய எம்.பிக்

(8-ம் பக்கம் பார்க்க)

## தம்பதெனியா எம்.பி. போகமாட்டார்

கொழும்பு, திங்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உபதலைவர்களில் ஒருவரான தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா கண்டியில் இம்மாதம் 28ந் தேதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-லங்கா சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சி ஆகியனவற்றின் பொதுக் கூட்டுவேலைக் கொள்கைத் திட்டத்தில் கைச்சாத்திடும் நிகழ்ச்சியையொட்டி நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ள மாட்டார்.

தமது தொகுதி மக்களின் அபிப்பிராயத்தை தெரிந்து கொண்டே தாம் அடுத்த நடவடிக்கையில் இறங்குவாரென்றும் திரு. ஆர். ஜி. அறிவித்துள்ளார்.

[எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3-ந் திகதி நடைபெறவிருக்கும் மாணவ ஆசிரியர்பரீட்சைக்கான 'பொது அறிவும் உள்ளூர் அறிவும்' மாதிரி வினு விடைகளை 6-ம், 7-ம் பக்கத்தில்பார்க்க]

## சண்., எஸ், டி. யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், செவ்

சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. என். சண்முகதாசனும், அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேறி, கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவும் அடுத்த மாதம் 2ந் தேதி யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள்.

இவர்கள் இருவரும் அன்று மாலை யாழ்ப்பாணம் ஆஸாத் வீதியில் நடைபெறவிருக்கும் முஸ்லிம் வாலிபர்களின் ஆண்டு விழாப் [illegible] கொள்கிறார்கள்.

## ஓர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் ஆயுர் வேத சிகிச்சை நிலையமும், மருந்துத்தொழிற்சாலையும்
[Ayurveda Clinic and Pharmacy, Jaffna]

ACP

டாக்டர் K. C. சண்முகரெத்தினம்

அவர்களின் மேற்காட்டிய அடையாளம் பதித்த லேபல்களை கள்ளத்தனமாக அச்சிட்டு டாக்டர் அவர்களின் தைலங்கள் (Nos: 1—6) என்று கூறி போலிச்சரக்கை போத்தல்களில் அடைத்து விற்பதாகவும் இதனால், முக்கியமாகக், குழந்தைகளின் உடல் நலம் பாதிக்கப்படுவதாகவும் எமக்குப் புகார்கள் அத்தாட்சிகளுடன் கிடைத்துள்ளன.

இவ்விஷயம் பற்றி பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும், கீழ்க்காட்டிய இரு ஸ்தாபனங்களிலேயே டாக்டர் அவர்களின் உண்மையான தைலங்களையும், மருந்து வகைகளையும் பெற்றுக் கொள்ளலாமென்றும், வேறு சிகிச்சை நிலையங்களில் எங்களுடையதைப் போன்ற, போலி லேபலுடன் விற்கும் தைலவகைகளுக்கு எமது ஸ்தாபனம் பொறுப்பு அல்ல என்பதையும் இதனல் தெரிவிக்கின்றோம்.

தலைமை ஸ்தாபனம்:
ஆயுள்வேத கிளினிக் & பார்மஸி
55, சிவன்கோவில் மேலை வீதி,
யாழ்ப்பாணம்.
[Phone: 546]

கிளை;
ஆயுள்வேத கிளினிக் & பார்மஸி
செப்பல் வீதி [Chapel St ]
3-ம் குறுக்குவீதி சந்தி
யாழ்ப்பாணம்.

508

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பொற்தொழிலாளர்:
மலைநாட்டில் சிங்களவர் விரும்பி அணியும் காப்பு, மாலை, காப்பு, மோதிரம், அரைப்பவுணில், முழுப் பவுணில் மேல் வேலை செய்தல் போன்ற வேலைகளில் திறமை வாய்ந்தவர்கள் தேவை. இருப்பிட வசதியுண்டு. மாதம் தலா 500 ரூபாவுக்கு மேல் உழைக்கலாம். விரும்புவோர் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1635, C/o 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1685

### விற்பனைக்கு

வேப்பமரம்:
சித்தன்கேணியி லுள்ள எமது வளவில் வேப்பமரங்கள் விற்பனைக்கு இருக்கின்றன. நேரில் பார்வையிடவும். விலாசம்: க. தில்லைநாதன், சிவன்கோவிலடி சித்தன்கேணி. 1962

மோட்டார் சைக்கிள்
Triumph. B N தொடர் இலக்க மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. போயா விலும் முதல் நாளும் பார்வையிடலாம். விபரங்களுக்கு: பொ. முத்துக்குமாரு, சொல்லங்கலட்டி வீதி, தெல்லிப்பழை. 1636


## செய்திச் சுருக்கம்

### சுகாதார விழா

கொழும்பு, திங்கள்
ஜூன் மாதம் 18-ந் திகதியிலிருந்து 24-ந் திகதிவரை சுகாதாரவிழாவைக் கொண்டாட அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

ஃ ஃ ஃ

### வயோதிபர் 216 பேர்

கொழும்பு, திங்கள்
அரசினர் வயோதிபர்இல்லங்களில் இருந்து சுமார் 124 பேர் வெளியேறியிருக்கின்றனர் என சமூகசேவை அமைச்சின் உத்தியோக பூர்வமான அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இலங்கை அடங்கிலும் உள்ள வயோதிபர் இல்லங்களில் சுமார் 216பேர் கடந்த வருடம் அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்காக அரசாங்கத்தால் 3,66,534 ரூபா செலவிடப்பட்டதாகவும் சமூகசேவை இலாகா தெரிவிக்கின்றது.

ஃ ஃ ஃ

### புதியதூதுவர்

கொழும்பு, திங்கள்
இலங்கையின் புதிய பர்மிய தூதுவராக திரு. சாமாதூவசின்வா நவ்னீவ் நியமிக்கப்பட்டுள்ளார்.

### மருதடிவிநாயகர் மகோற்சவம்

உடுவில், திங்கள்
மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலின் வருடாந்த மஹோற்சவ விழா இம்மாதம் 28ந்திகதி கொடியேற்ற வைபவத்துடனாரம்பமாகிறது.

பதினெட்டு நாட்களுக்கு நடைபெறவிருக்கும் உற்சவ நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஏரப்ல்மாதம் 13,14 ம்திகதிகளில் நடைபெறும் தேர், தீர்த்தோற்சவ நிகழ்ச்சிகளுடன் மேற்படி ஆலய மஹாேற்சவ விழா பூர்த்தியடையும்.

## வானொலி கூட்டுத்தாபனம்

### செவ்வாய்க்கிழமை 26-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

844 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம் 1-00 தேர்ந்த இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கதம்ப இசை.

இரவு 6-15 சங்கீத பாடம், 6-30 பேச்சு, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி—சைவசஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-30 நேர்முக வர்ணனை, 9-45 கதாப்பிரசங்கம்—வி. கே. ஆறுமுகம்

### ஆலய உற்சவம்

ஊர்காவற்றுறை, திங்கள்
புங்குடுதீவு- மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய முதலாம் திருவிழா எதிர் வரும் செவ்வாய்க்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. புதிதாகச் செய்யப்பட்ட கொடித்தம்பத்தில் கொடியேற்றப்படும்.

கொடியேற்ற வைபவத்தைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும். இரவு 'கந்தன் கருணை' என்னும் பொருள் பற்றி அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியாரின் சகோதரர் திருப்புகழ்மணி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

நல்லூர் தேவஸ்தான பஜனைக் குழுவினரும், கொழும்பு ஜெயந்திநகர் திருஞானசம்பந்த கான சபா பஜனைக் குழுவினரும் கூட்டுப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்வார்கள்.

### சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செவ்.
யாழ்ப்பாணம் கச்சேரி நலன்புரிச்சங்கத்தின் ஆதரவில் இம்மாதம் 30-ம் திகதி டாக்டர் கே. ஏ. டி. எஸ். கருணாரத்தின 'சலரோகம்' பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார். கச்சேரி ஆலோசனைமண்டபத்தில் இந்நிகழ்ச்சி அன்றுமாலை 4. 30 மணிக்கு நடைபெறும். [கா. நி.]

## "ஈழம் தந்த கேசரி"

### நூல்வெளியீட்டுவிழா

குரும்பசிட்டி, திங்.
குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் இம்மாதம் 28-ந் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ரசிகமணி கனக செந்திநாதனின் "ஈழம்தந்த கேசரி" என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெறவிருக்கின்றது. ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்தவிழாவையொட்டி வெளியிடப்படும் இந்நூலை திரு. எஸ். ஏச், பேரின்பநாயகம் வெளியிட்டுவைப்பார். இவ்விழாவில் திரு. எஸ். ஆர். கனகநாயகம், தியாகி கே. ராஜகோபால் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்த 17-வது ஆண்டு நினைவுவிழா இம்மாதம் 27, 28, 29-ம் திகதிகளில் நடைபெறும்.

### காங்கிரஸ் கிளை உறுப்பினர்

காங்கேசன்துறை, திங்.
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தெல்லிப்பழை வாலிப முன்னணியின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வி. விஜயக்குமார், உபதலைவர்: கி.சண்முகரத்தினம், காரியதரிசி: மு. கமலநாதன், உபகாரியதரிசி: கி. ஜெகதீஸ்வரன், தனாதிகாரி: க. சிவானந்தவேல். உபதனாதிகாரி; இ சுப்பிரமணியம்.

ஏழுபேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது

## அறிவித்தல்

### வடஇலங்கை வீடமைப்புச் சங்கத்தின்

விசேஷ பொதுக் கூட்டம் 27-3-68 புதன்கிழமை பி. ப. 2-30 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். காணிப்பங்கீடு சம்பந்தமான தீர்மானங்கள் எடுக்க வேண்டியிருப்பதால் அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

சி. கந்தமூர்த்தி
கௌரவ காரியதரிசி.
50, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். 507

### பாராட்ட தீர்மானம்

அளவெட்டி, திங்.
காங்கேசன்துறை வட்டார வித்தியாதரிசியாகக் கடமையாற்றி கோப்பாய் வட்டாரத்துக்கு இடமாற்றமாகிச் செல்லும் திரு. வே. சண்முகநாதனை வலி—வடக்கு தமிழாசிரிய சங்கம், ஒரு சேவைநலம் பாராட்டிக் கௌரவிப்பதென சங்கத் தலைவர் திரு. வ. கந்தையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### யாருடையது ?

மல்லாகத்தைச் சேர்ந்த திரு. கே, எஸ். அருளானந்தம் என்பவரால் திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

## உபஉணவு பயிர் செய்கைக்கு முத்தரையன் கட்டு குளத்திட்டம்

### விவசாயவிஸ்தரிப்பு உத்தியோகத்தர் விபரிக்கிறார்

வவனியா, திங்கள்
வவனியா மாவட்டத்திலுள்ள மிகப்பழமைவாய்ந்த முத்தரையன் கட்டுக் குளத்திட்டத்தின் கீழ் அரசாங்கம் உபஉணவுப்பயிர் உற்பத்தி செய்வதற்காக ஒரு திட்டம் வகுத்திருக்கின்றது என்பது இதுவரையில் உங்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயமாகும். இயந்திரத்தினால் பரவிப் பண்படுத்திய நன்னிலமும், தலைக்கு மூன்று ஏக்கரும் நீர்பாசன வசதியுடன் வாலிபர்க்கும், முதியோர்க்கும் வழங்கப்பட்ட வருகின்றது. அதுவுமன்றிப் பல்காலம் விவசாயத் துறையில் பணியாற்றிப் பின்பு உதவி விவசாய அதிபராகக் கடமையாற்றிய சென்ற மாதம்இளைப்பாறிய திரு. எஸ். கனகரெத்தினத்திடம் முத்தரையன் கட்டுக் குளத்தை விருத்தி செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவரின் உதவியாளர்களாக விவசாயப்போதனாசிரியர்கள் திருவாளர்கள், செல்வராஜன், சின்னத்தம்பி அரசரத்தினம், செல்வராசா ஆகியோர் அமர்த்தப்பட்டுள்ளார்கள். சென்ற ஒரு வருடகாலமாக 46 வாலிபர்கள் ஏறக்குறைய 125 ஏக்கர் சாகுபடி செய்து இற்றைவரையில் அவர்கள் ரூபா 30,000 அளவில்பணம்சேகரித்துள்ளார்கள். வவனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. பொ. மாணிக்கவாசகர் வவனியா, மாவட்ட விவசாயிகளுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திருவாளர்கள் சின்னையா தாவிங்கம் ஆகிய இருவிவசாயிகளும் சென்ற ஆண்டு இறுதிப்பகுதியில் குடியேறி தலைக்கு 2 ஏக்கரில் மிளகாய்ப் பயிர் திருந்திய முறையில் பயிர் செய்து அதன் பலாபலனை அனுபவித்து வருகின்றனர்- தற்போது இத்திட்டத்தில் எத்திசை நோக்கினும் இயந்திரங்களும் வாலிபர்களும் முதியோர்களும் அரசாங்க ஊழியரும் ஒரேநோக்குடன் அபிவிருத்தி நீர்ப்பாசனம் விவசாயம் முதலியவற்றில் ஊக்கத்துடன் செயல் புரிந்து வருவதைக்காணலாம். தற்போது நூறுவிவசாயிகள் இத்திட்டத்தில் குடியேறியுள்ளனர் என்றும்


நவீனமுறையில் நவதானியம் விளைவித்து பொன்னும் முத்தும் உவந்து தரக்கூடிய முத்தரையன் கட்டுக்குளத் திட்டம் பன்னீராயிரம் ஏக்கர் பொன்நிலத்தை நன்கு பண்படுத்த நாலாயிரம் மனவுறுதி படைத்த விவசாயிகளை வா வா என அழைக்கின்றது. நம் மாவட்ட வாலிபர்களும். முதியோர்களும் நாட்டின் நலன் கருதி இவ்வழைப்பிற்குச்செவிசாய்த்து அவ்விடம சென்று குடியேறுவார்கள்என்பது திண்ணம். என்றும் அவர் எடுத்துக்கூறியுள்ளார்.

### மன்னார் நீதிமன்றத்தில்

அடம்பன், திங்கள்
இரணை இழுப்பைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த மனநோயாளர் ஒருவர் அங்கொடைக்கு அனுப்புவதற்காகச் சாட்சிக் கூட்டில் ஏற்றப்பட்டபோது நீதிபதியை முறையீனமாகப் பேசியதுடன் அவரைப் பிடிக்கச் சென்ற பொலிஸ்காரரையும் தாக்கிய சம்பவம் மன்னார் கோர்ட்டில் நடைபெற்றுள்ளது, அவரைக் கட்டுப்படுத்துவது பொலிஸ்காரருக்கும் காவற்காரருக்கும் பெரும் சிரமமாகவிருந்ததாம். அவர துபெயர் செட்டிஎனக்கூறப்படுகிறது.


MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Warren Beatty, Leslie Caron
in
PROMISE HER ANYTHING
(Techni color)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
விஜிதா (ஹட்டன்)



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)

REGAL JAFFNA
Daily at
4-40, -7-00, & 9-45 p.m.
Dean Martin & Alain Delon
in
TEXAS ACROSS THE RIVER
[Techni color]

93-வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

46-வது தினம்!
நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர். - தேவிகா
நடித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலைக் கண்டிக்கும் தீர்மானம்

## ஐ. நா. பந்தோபஸ்து சபையில் ஏகமனதாக நிறைவேறியது

நியூயோர்க், மார்ச் 25

**அண்மையில் ஜோர்டான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை ஐ. ந. பந்தோபஸ்து சபை ஏகமனதாகக் கண்டித்துள்ளது.**

**இஸ்ரேலைக் கண்டிக்கும் தீர்மானமொன்று நேற்று ஐ. நா. பந்தோபஸ்துசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.**

அத்துடன் அப்பகுதியில் எல்லாப் பலாத்கார நடவடிக்கைகளையும் கண்டிப்பதாகவும் அத்தீர்மானம் குறிப்பிட்டுள்ளது. அரபு தீவிரவாதிகளின் கொரில்லா நடவடிக்கைகளையே தீர்மானத்தின் இப்பகுதி குறிக்கிறது.

இப்பகுதியைத் தீர்மானத்தில் சேர்க்கவேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியதன் பேரில் இஸ்ரேல் கண்டனத் தீர்மானத்தை உருவாக்கிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், செனகல் ஆகியவை அதையும் சேர்த்துக்கொண்டனர்.

### தடை நடவடிக்கை பற்றி எச்சரிக்கை

மேற்கு ஆசியப் பகுதியில் எல்லா இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்திக்கொள்ளுமாறு இஸ்ரேலைக் கேட்டுக்கொள்ளும் இத்தீர்மானம் இஸ்ரேல் தொடர்ந்து இராணுவ பலாத்காரத்தில் இறங்கினால் அதற்கெதிரான பொருளாதார, இராணுவ நடவடிக்கைகளைச் சபை எடுப்பது பற்றி ஆலோசிக்கும் என்று கூறுகிறது.

தீர்மானத்தின்மீது பேசுகையில். ஜோர்டான் மீது இஸ்ரேல் நடத்தியுள்ள தாக்குதல் எல்லையை மீறிவிட்டதொன்றாகும், என அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பேர்க் வலியுறுத்தினார்.

ரஷ்யப் பிரதிநிதி திரு. மாலிக் பேசுகையில், பந்தோபஸ்து சபையின் முடிவுக்கிணங்க இஸ்ரேல் நடந்து கொள்ளுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகக் கூறினர்.

அல்ஜீரியப் பிரதிநிதி பேசுகையில், இஸ்ரேலிடமுள்ள அரபுப் பிராந்தியங்களை மீட்க அரபு மக்கள் இராணுவ நடவடிக்கை எடுக்கவே செய்வார்களென்றும் அதைச் சபை தடுக்க முடியாதென்றும் கூறினர்.

## இஸ்ரேல் நிராகரிப்பு

இதற்கிடையில் ஐ. நா. பந்தோபஸ்து சபைத் தீர்மானத்தைத் தான் ஏற்க முடியாதென்று இஸ்ரேல் அறிவித்துள்ளது. மீண்டும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் அது தெரிவித்துள்ளது.

ஜோர்டான் மீது இஸ்ரேல் மீண்டும் இராணுவ நடவடிக்கை எடுப்பது ஐ. நா. தீர்மானத்தைத் தொடர்ந்து ஜோர்டான் எடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்துள்ளது என்றும் இஸ்ரேல் தெரிவித்துத்துள்ளது.

நேற்று ஜோர்டான் துருப்புகளுக்கும் இஸ்ரேல் துருப்புகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் 2 சிவிலியன்கள் கொல்லப்பட்டதாக ஜோர்டான் அறிவித்துள்ளது.

ஐந்து இஸ்ரேலியரைக் காயப்படுத்தியதாகவும், ஒரு டாங்கியைச் சேதப்படுத்தியதாகவும் ஜோர்டான் மேலும் அறிவித்துள்ளது.

அரபு கொரில்லாக்களுடன் இஸ்ரேல் ஒரு நீண்ட போர் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரி திரு. டயான் கூறியுள்ளார்.

## மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள்

### இந்திரா செய்தி

புதுடில்லி மார்ச். 25

மனவளர்ச்சி குன்றியபிள்ளைகளின் நலத்தையிட்டு ஒவ்வொரு நாகரிக நாடும் அக்கறை செலுத்த வேண்டியது அவசியமென இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வலியுறுத்தியுள்ளார்.

டில்லி நகரில் மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளுக்கென நடத்தப்படும் கொடிதினத்தையிட்டு வெளியிட்ட ஒரு செய்தியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

## சென்னையில் திரு, கிரி

சென்னை, மார்ச். 25

இந்திய உப ராஷ்டிரபதி திரு. வி.வி. கிரி தென்னிந்தியாவுக்கு 10 நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று சென்னைவந்து சேர்ந்தார்.

## அதிக விரல்களுடன் பெண் குழந்தை

மெஸினு(சிஸிலி, மார்ச் 25

இங்கு ஒரு பெண் குழந்தை 12கை விரல்கள் 12 கால்விரல்கள் ஏற்கனவே வளர்ந்துவிட்ட 6 பற்கள் ஆகியவற்றுடன் பிறந்துள்ளது.

## அயர்லாந்துக்கு அருகே விமான விபத்து

### 61 பேர் மரணம்

டப்ளின், மாாச். 25

அயர்லாந்துக்கருகே நட நடந்த ஒரு விமான விபத்தில் விமானத்திலிருந்த 61 பேரும் உயிரிழந்து விட்டதாக நம்பப்படுகிறது.

அயர்லாந்திலுள்ள கோக் என்னுமிடத்திலிருந்து லண்டனுக்குச் சென்றுகொண்டிருந்த இவ் விமானம் தென்மேற்குஓரமாக ஐரிஷ் கடலில் விழுந்தது.

பிரிட்டனுடன்

## பேச்சு வார்த்தைகளில் ஆர்வம்

### ரொடீஷியப் பிரதமர் தெரிவித்துள்ளார்

சாலிஸ்பரி, மார்ச் 25

ரொடீஷியப்பிரச்னையைத் தீர்க்குமுகமாகத் தாம்பிரிட்டனுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தயாராகவிருப்பதாகவும்: பேச்சு வார்த்தைகளே சிறந்த வழியெனத் தாம் இப்போதும் நம்புவதாகவும் ரொடீஷியப்பிரதமர் திரு. அயன் ஸ்மித் இங்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

ரொடீஷியா. தனியான ஒரு சுதந்திர அரசியற் சாஸனத்தைத் தனக்கென வகுத்துக்கொண்டால், பின்னர் அந்த முடிவை மாற்றமுடியாது என்றும் திரு. ஸ்மித் எச்சரித்தார்

## ஐ.நா. வர்த்தக மகாநாடு ஒரு நாள் நீடிக்கப் பட்டது

### சமரச தீர்மானம் நிறைவேற்றப்படலாம்

புதுடில்லி, மார்ச் 25

இன்று முடிவடையவிருந்த புதுடில்லி ஐ. நா. வர்த்தக, அபிவிருத்தி மாநாடு, நாளை நள்ளிரவுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரிமாதம் 1-ந்திகதி ஆரம்பமான இம்மகாநாட்டில் 132 நாடுகளிலிருந்து 1 00 பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

உலகிலே அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு மிடையேயான பேதங்களை அகற்றுவதே இம்மகாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

பொருளாதார. உதவி வர்த்தகச் சலுகைகள், உலகச் சந்தையில் பொருட்களின் விலைகள், இவை போன்ற முக்கிய அம்சங்களில், மாநாட்டுப் பிரதிநிதிகளால் சமரசமான ஒரு தீர்மானத்தை உருவாக்க முடியவில்லையாதலாலேயே, மாநாடு நாளைவரை நீடிக்கப்பட்டுள்ளது

பிரதிநிதிகளிடையேநடைபெறும் தனிப்பட்ட பேச்சு வார்த்தைகளில், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும், அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளுக்குமிடையே பல விஷயங்களில் ஒற்றுமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆகவே பெரும்பாலும், அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளுக்கு உதவியளிக்கும் வகையில் ஒரு தீர்மானம் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இணுவில்வாசிக்கு பரிசு கிடைத்தது

உடுவில், திங்கள்

இணுவிலைச் சேர்ந்த திரு. வே. அ. குலேந்திரன் என்பவர் வனவிலங்குக் புகைப்படப் போட்டியில் மாணவர்களுக்கு மத்தியில் இரண்டாவது பரிசைப் பெற்றிருக்கின்றார். இவருக்குப் பரிசாக 250 ரூபா ரொக்கம் கிடைத்தது. பரிசுபெற்ற திரு. வே. அ குலேந்திரன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் மாணவராகும். புகைப்படம் பிடித்தலை ஒரு பொழுதுபோக்காகக் கொண்டுள்ளாராம் இவர்.

## இவர்களிடம் இல்லையாம்

ஹட்டன், திங்கள்

"இ. தொ. கா. பெரும் பணத்தை செலவு செய்து மாநாட்டை விழாவாக நடத்தியது. ஆனால் எங்களிடம் பணம் இல்லை. அப்படிப்பணம் இருந்தால் அப்பணத்தை மலையக மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு செலவிடுவோம்.

சென்.பொஸ்கோ கல்லூரியில் நடைபெற்ற இ.தொ. காவின் நான்காவது ஆண்டு மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார், வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம்.

## சனசமூக நிலைய உறுப்பினர்

உடுவில், திங்

கொல்லங்கலட்டி சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டத்திலே பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. சரவணமுத்து. உபதலைவர்கள்: திருவாளர்கள் ஏ. நவரத்தினம், வி, குமாரசாமிக்குருக்கள், வி. விநாசித்தம்பி. செயலாளர்: திரு. என். ஜீலோஸ்வரா, தனாதிகாரி: திரு. திரு. எஸ். சத்தியலோகநாதன், நூல்நிலையப் பொறுப்பாளர்: திரு. க. கனகரத்தினம்.

எட்டுப்பேர் கொண்ட நிர்வாகக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## பனமா ஜனாதிபதி ரேபிள்ஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டார்

### சட்டசபை முடிவை ஏற்க ஜனாதிபதி மறுத்துள்ளார்

பனமா, மார்ச் 25

**தென்னமெரிக்கக் குடியரசான பனமாவில், அரசியல் நெருக்கடி தோன்றியுள்ளது.**

**பனமா ஜனாதிபதி திரு. மார்க்கோ ரேபிள்ஸ் பனமா சட்டசபையின் பெரும்பான்மை வாக்குகளால் பதவி நீககம் செய்யப்பட்டுள்ளார்.**

ஜனாதிபதி ரேபிள்ஸைப் பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்துக்கு 30 வாக்குகள் சாதகமாகக் கிடைத்தன. பாதகமாக ஒருவாக்கும் அளிக்கப்படவில்லை.

உபஜனாதிபதியான திரு. மாக்ஸ் டெல்வெலேற் தற்காலிக ஜனாதிபதியாக நியமிப்பதெனவும் பனமா சட்டசபை முடிவு செய்தது.

இந்தப் பரபரப்பான முடிவுகளைச் சட்டசபை எடுத்துக்கொண்டிருந்த அதே நேரத்தில், சட்டசபைக் கட்டிடத்துக்கு வெளியே இராணுவத் துருப்புகள் காவல் புரிந்துகொண்டிருந்தன.

### முடிவை ஏற்க மறுப்பு

இதற்கிடையில் 1964-ம் ஆண்டு தொடக்கம் பனமாவின் ஜனாதிபதியாகவிருக்கும் திரு. ரேபின்ஸ், தமது பதவிகாலம் முடியும்வரை தாம் பதவியில் நீடித்திருக்கப்போவதாக அறிவித்துள்ளார். அவரது பதவிகாலம் அடுத்த ஒக்டோபர் மாதம் முடிவடைகிறது.

தம்மைப் பதவி நீக்கம் செய்யும் சட்டசபை முடிவைத் தாம் பனமா சுப்ரீம் கோட்டின் தீர்ப்புக்கு விடப்போவதாகவும் ஜனாதிபதி ரேபின்ஸ் அறிவித்துள்ளார்.

பனமாவின் பலம்வாய்ந்த தேசிய பாதுகாவல் படை. சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு வெளியிடப் படும்வரை, திரு. ரேபின்ஸின் பதவிநீக்கமுடிவைத் தான் ஏற்கமுடியாதென அறிவித்துள்ளது.

## குழந்தைகள் சுகாதாரத்தில் டிப்ளோமா பெற்றார்

டாக்டர் வி. ராஜேஸ்வரன் எம். பி, பி. எஸ், குழந்தைகள் சுகாதாரத்தில் லண்டன் டிப்ளோமா பெற்றுள்ளார். அவர் இப்போது தமது மனைவி தோல்வியாதிகளில் மேற்படிப்புப் படிக்கும் அதே ஆஸ்பத்திரியிலேயே படித்து வருகிறார். இங்கிலாந்தில் டாட்போர்டிலுள்ள ஜொயின் கிரீன் ஆஸ்பத்திரியில் இருவரும் [illegible]

## கட்டுப்பாட்டு விலைக்குகிடையாது

புத்தளம், திங்கள்

கட்டுப்பாட்டு விலைக்கு இப்பகுதியில் சிமெந்துகிடையாது. அட்டவிலுசிமெந்து தொழிற்சாலை கட்டட நிர்மாணவேலைக்குதினசரி1000 மூடை சிமெந்து தேவைப்படுகின்றது. பல காரணங்களினலும் இங்கு 12 ரூபா 25 சதமாக இருந்த சிமெந்து இப்போது ரூபா 23 50 சதமாக விலை உயர்ந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தீய உணர்வுகள் வரும்போது மனம் சிலவேளைகளில் தடுமாற்றமடைகிறது. இதுகூட நீங்கள் மனப் பக்குவமடைந்து வருகிறீர்கள் என்பதற்கு அறிகுறி தான். தீய உணர்வுகள் உங்கள் நினைவில் வராது மனத்தை முழுமையாக வளர்த்துக்கொண்டால் தடுமாற்றமே ஏற்படாது பூரணத்துவம் நிலவும்.

— சுவாமி சிவானந்தா

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 13ந் திகதி [26-3-68]

## கச்சதீவு; ஒரு யோசனை

கச்சதீவு அர்ச். அந்தோனியார் திருநாள் நடைபெற்று முடிந்துவிட்டது. இத்திருநாளையொட்டி அங்குவந்து சேர்ந்திருந்த இலங்கை-இந்திய யாத்திரிகர்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பிவிட்டனர். கச்சதீவு யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை தோன்றி இலங்கை - இந்திய அரசாங்கங்களுக்குச் சிறிது தலையிடியைக் கொடுத்த போதிலும், சட்ட விரோதக் குடியேற்றத்தடுப்பு, கள்ளக்கடத்தல் தடுப்பு ஆகிய நடவடிக்கை காரணமாக இலங்கையிலிருந்து சென்ற யாத்திரிகர்களுக்குச் சில பல தொல்லைகள் நேர்ந்தபோதிலும் கச்சதீவு, செய்தியில் முக்கியம் பெற்றமையால் இம்முறை பெருந்தொகையான யாத்திரிகர்கள் அங்கு சென்றிருந்தனர்.

கச்சதீவு யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. விரைவில் ஒரு சுமுகமான தீர்வு காணப்படவேண்டியது அவசியம்.

கச்சதீவுப் பிரச்னை பற்றி தமிழ்நாடு சட்டசபையில் சமீபத்தில் சில அங்கத்தவர்கள் விவாதத்தைக் கிளப்ப முயன்றபோது கச்சதீவு சம்பந்தமான தஸ்தாவேஜுகள் மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் இரு நாடுகளின் நலனையும் கருதி இப்போது இப்பிரச்னையைக் கிளப்ப வேண்டாமென்று முதல் அமைச்சர் திரு அண்ணாதுரை கேட்டுக்கொண்டார். கச்சதீவு சம்பந்தமாக இருநாடுகளுக்குமிடையில் விரைவில் பேச்சுவார்த்தை நடைபெறுமென்று எதிர்பார்க்கலாம். ஆயினும் கச்சதீவுத் திருநாள் சமயத்தில் மட்டும் 'கச்சதீவு யாருக்குச் சொந்தம்?' என்ற பிரச்னை எழுவதும் பின்னர் அது மறைந்து விடுவதுமுண்டு. இது இருநாடுகளின் நல்லுறவுக்கு மட்டுமல்ல இருநாட்டு மக்களின் நல்வாழ்வுக்கும்கூட நல்லதல்ல.

கச்சதீவில் கோவில் கொண்டிருக்கும் அர்ச். அந்தோனியாருக்கு திருவிழா எடுப்பதற்காகத்தான் இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் அங்கு செல்கின்றனர் என்று கூறமுடியாது. ஆயிரத்தில் நூற்றுக்கும் குறைவானவர்களே அங்கு ஆண்டவனைத் தரிசிக்கவும் நேர்த்திக்கடனைச் செலுத்தவும் செல்கின்றனர். ராமநாதபுரம் ராஜா சமீபத்தில் குறிப்பிட்டது போல், குடியுரிமை மற்றும் சில பல சட்டங்களினால் இரு நாடுகளிலுமாகப் பிரிந்து வாழும் குடும்பத்தினர், ஒருவரை ஒருவர் சந்தித்து அளவளாவி மகிழ்வதற்கு 'பிரிந்தவர் கூடும் திவாக' இது விளங்குகிறதென்பதும் அங்கு செல்லும் யாத்திரிகர்களில் பலர் இந்தச் சந்திப்புக்காகவே வருகின்றனர் என்பதும் உண்மை. இவர்கள் தவிர அங்கு செல்பவர்கள் பலரும் வியாபார நோக்கத்துடனேயே செல்கின்றனர். இதனால்தான் புனித ஸ்தலமாக விளங்கவேண்டிய அந்தோனியார் கோவில் பிரதேசமும் கச்சதீவும், ஆண்டுக்கொருமுறை அங்கு நடைபெறும் திருநாள் சமயத்தில் குடி, சூதாட்டம், திருட்டு கொள்ளை லாபம் போன்ற இன்னும் பல தீயசெயல்களுக்கு இடமாக விளங்குகிறது. நாகரிகமற்ற ஒரு சமுதாயம் போல், திருநாள் சமயமான இரண்டு மூன்று தினங்களில், நாகரிகம் நன்கு தெரிந்த மக்கள் நடந்துகொள்கின்றனர். கச்சதீவு யாருக்குமே சொந்தம் இல்லை என்ற நிலையில் இருப்பதால் தான் கட்டுப்பாடு, ஒழுங்கு எதுவும் நிலைநாட்ட முடியாதிருக்கிறது. இம்முறை திருவிழாக் காலத்தின் போது இலங்கை முப்படை அதிகாரிகள் பலரும், இலங்கை - இந்திய பொலிசார் பலரும், உத்தியோக உடை அணியாமல் கச்சதீவில் நின்றனர். ஆயினும் அவர்கள் கவனமெல்லாம் வேறு விஷயங்களில் தான்.

இலங்கை-இந்திய மக்களின் நல்லொழுக்கத்தைப் பாதுகாப்பதற்காகவாவது கச்சதீவு யாருக்குச் சொந்தமென்ற பிரச்னைக்கு முடிவுகாணப்பட வேண்டும் அல்லது இதற்குத் தீர்வு காணப்படும் வரை கச்சதீவுத் திருநாள் சமயத்திலாவது அதை ஒரு புனித ஸ்தலமாகப் பிரகடனப்படுத்தி மது, சூது ஆகியவைகளைத் தடைசெய்யவும் யாத்திரிகர்களுக்கு உணவு, குடி தண்ணீர் கஷ்டமின்றிக் கிடைக்கவும் இருநாட்டு அரசாங்கங்களும் கூட்டாக நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

# செந்தமிழும் சைவமும் வளர்த்த சதாவதானம் கதிரைவேற்பிள்ளை

## இன்று நினைவு தினம்

— பொ. திருச்செல்வம் —

பழமையொடு பெருமை சேர் தமிழையும் செழுமையுடன் செம்மைசேர் சைவநெறிதனையும் பெருமையுடன் பேணிவளர்த்த திரு நா. கதிரைவேற்பிள்ளையவர்களின் நினைவுநாள் ஒன்றாகும்.

மெய்யருட் பாவெங்கே
மெய்கண்ட நூலெங்கே
தெய்வீக நீறெங்கே
செந்தமிழின்
மெய்யெங்கே.

என்று தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் 1907-ம் ஆண்டு பங்குனி மாதம் 18-ந் திகதி கதறிக் கதறி அழவேண்டிய ஒரு பேரிழப்பு தமிழ்மொழிக்கும் சைவ நெறிக்கும் ஏற்பட்டது. திரு. வி. க. வின் அருங்கருவும் ஈழத் தாயின் இன்தமிழ்ப் புதல்வனும் தமிழ்த்தாயின் வீருந்தர் செல்வனுமாகிய திரு நா. கதிரவேற்பிள்ளையவர்கள் தமது 33 ஆண்டு மண்ணுலக வாழ்வுடன் இறைவனடிசேர்ந்தபோதுதான் திரு. வி. க. அப்படிக் கதறியழுதார்.

''உன்போ லிலக்கணமும்
உண்மையிலக்கியமும்
நன் ஞான நூல்களும்
ஞாலத்தில் - என்றனக்குச்
சத்தியமாய்ப் போதிக்கும்
சற்குரவர் வேறில்லை
பித்தனேன் என்செய்வல்
பேசு''

என உலகுபுகழ் திரு. வி. க. வினால் பெருமதிப்புடன் வியந்தோதப்பட்ட திரு நா. கதிரைவேற்பிள்ளையின் பெருமை நம்போன்றோரால் சொல்லவேண்டுவதோ?

யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி நாகப்பிள்ளை என்பவருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் பிரசோற்பதி யாண்டு மார்கழி மாதம் மூன்றும்நாள் பெருமகனை தோன்றினார், சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை இளமைப் பருவம் முதற்கொண்டு நுணுகி ஆராயும் திறன் பெற்றார் மேலைப் புலோலியிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயின்றார். பின்னர் குடும்பத்தை நலிவித்த நல்குரவு காரணமாக இளைஞர் கதிரைவேற்பிள்ளையின் கல்வி தடைப்படவே பொருள்வருவாய் காரணமாக நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளை அவர்களிடம் எழுதுவினைஞராகக் கடமையாற்றினார். சில காலம் ஆசிரியப் பணியும் புரிந்தார். தமிழ்ப் பெருங்கடலைப் பருகத் தணியாத ஆர்வங்கொண்ட பிள்ளையவர்கள் தமது இருபத்திரண்டாம் வயதில் அவ்வேலையை உதறித் தள்ளிவிட்டு அழியாப் பெரும் செல்வமாம் தமிழ்ச் செல்வத்தை வாரி எடுத்திடத் தமிழகம்நோக்கினார், அங்கு வட தென் மொழிகளுடன் திரு. தா. கனகசுந்தரம் பிள்ளையிடம் தொல்காப்பியம் முதற்கொண்டு பல இலக்கண இலக்கியங்களை ஐயமறக்கற்றுப் புலமை எய்தினார்.

சிவசேஷ்திராலய மகோற்சவ விளக்கம், ஏகாதேசிப் புராண அரும்பதஉரை, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராண வசனம், நைடதத்துக்கு வரைந்த உரை ஆகிய நூல்களே முன்னூல்ரச் சைவ உலகம் நன்கறியச் செய்தன. 1897-ம் ஆண்டு மயிலாப்பூரில் உள்ள செந்தோம் உயர்நிலைக் கல்லூரியிலும் 1898-ம் ஆண்டு வேப்பேரி உயர்நிலைக் கல்லூரியிலும் பிள்ளையவர்கள் கடமையாற்றினார்.

இவர் தெய்வபக்தியில் அதிக ஈடுபாடுடையவராக விளங்கினார் இவர் மேலைப் புலோலியில் அமைத்துள்ள செல்வக்கதிர்காமம் புதுச் சந்நிதி இவரது பக்திக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அவருடைய மேனி சைவத் திருநீற்றின் ஒளியினையே எந்நேரமும் கொண்டு விளங்கியது அருட்பாவினை அரனடிக்கு ஒப்பப் பண்புமியும் இயல்பினர். ஆனாலும் அரசும் பின்னிப் பிணைந்தது ஒத்தநிலையில் சைவமும தமிழும் ஒன்றி தம்புலவர் மனதில் இடம்பெற்றன என்பதற்கு அவருடைய சேவைகளே சான்று பகரும்.

இவர் சிறந்த சொற்[illegible] திறனாற்போல இவர் பேசுவார். மேலும் மனத்தில் உள்ள ஒரு கருத்தை பிறருக்காக அஞ்சி ஒளிக்காமல் துணிவோடு எடுத்தியம்பும் உறுதியும் அஞ்சாமையும் கொண்டவர். பல உண்மைகளைத் தர்க்க வாயிலாக எடுத்து நிறுவிக் கற்றோரும் மற்றோரும் ஏற்கும்படி செய்தார். மாயவாதத்தை நிராகரித்துப் பேசுவதில் வல்லமை படைத்த இவருக்கு சந்திநாதசுவாமிகளின் தலைமையில் ''மாயவாததும்சகோளரி'' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. எதுவித ஆயத்தமுமின்றி திடீரென ஒரு மேடையில் எறும்பைப்பற்றி எட்டுமணி நேரம் பேசியதிலிருந்து இவருடைய திறமை புலப்

(6-ம் பக்கம்பார்க்க)

## இன்றைய பலன்

பங்குனி மீ 13 உ
[26-3-68]
செவ்வாய்க்கிழமை

திதி- திரயோதசி.
நட்சத்திரம் - சதயம.
ராகுகாலம்- 3-15—4-45.
சுபநேரம்- 10-45—12-15.

இன்று பிறந்தவர்களுக்கு - புதுமையான சம்பவங்கள் இடம் பெறும். புத்திரர்களால் மகிழ்ச்சியுண்டு. வீட்டில் சுபகருமங்கள் இடம் பெறலாம். வயது முதிர்ந்தவர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். தூரதேசத்துச் செய்தி கிடைக்கும். விருந்தாளிகள் நிறைய வருவர். வருமானம் எவ்வளவு இருப்பினும் செலவும் கட்டுமீறியே காணப்படும். பண விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

மேஷம் - சீரணக் குறைவு, சிக்கல்கள் தோன்றும்.
ரிஷபம் - விளைபொருள் விருத்தி, விருந்துமுண்டு.
மிதுனம் - புத்திரர் புகழ், புதிய உற்சாகம்.
கடகம்- சிறு பகையுண்டு, மனப்போராட்டம்.
சிம்மம் - இன்புற்று வாழ்வீர், இறையருள் உண்டு.
கன்னி - எள்ளிச் சிரிக்காதே, துள்ளி வருகுது வேல்.
துலாம் - பிதாவழிப் புகழ், பிறந்தக அழைப்பு.
விருச்சிகம்- விரும்பியது கிடைக்கும், வெற்றி முரசு கொட்டு.
தனுசு - போன பணம் வரும், வாழ்வில் புது மணம் தரும்.
மகரம் - அபாய அறிவிப்பு, அவதானம் வேண்டும்.
கும்பம். கோபப் பார்வை, கொள்கையில் கோணல்.
மீனம் - தனச்சிறப்பு, தானியவிருத்தி.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## நாட்டிலும் நகரிலும்

தமிழ் மக்களிடையே சாதிப்பிரச்னை இருப்பது பற்றி சிங்கள அரசியல் தலைவர்களும் சிங்களப் பத்திரிகைகளும் பிரமாதப்படுத்துகின்றனர். தமிழரின் சாதிக் குழப்பங்களை மிகப்பெரிதாக்கி, முதலைக்கண்ணீர் வடித்து, தாழ்த்தப்பட்டோர் என்று கூறப்படுபவர்களுக்கு மத மாற்றம் செய்து கோவில் கட்டவும் சிலர் முனைந்துள்ளார்கள்.

சிங்கள மக்கள் மட்டும் சாதி சமயம் என்ற வேறுபாடுகளை அறவே புறக்கணித்து எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம் என்ற ராமராஜ்யக்கொள்கையைக் கடைப்பிடித்து ஒழுகுகிறார்களா என்பது ஒரு கேள்வி பொதுசிங்கள மக்களிடையே சாதி பேதம் நிறைய இருப்பதை நாம் அறிவோம். அதுதான் போகட்டும். அவர்கள் பாமரமக்கள் என்று வைத்துக்கொண்டாலும் சிங்கள அரசியல் கட்சிகளிலும் அரசியல் தலைவர்களிடத்தும் சாதிவேற்றுமை நிலவுகிறதென்பதை மறுக்க முடியுமா?

அங்கே அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லோரும் பௌத்த 'கொயிகம' இனத்தைச் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டும் என்பது தான் நியதி.

யூ. என். பி. தலைவர் டட்லி பௌத்தர், 'கொயிகம' என்ற உயர்குலச்சிங்களவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவரும் அவ்வாறே.

இதர மதத்தைச் சேர்ந்தவர்களோ இதர குலத்தைச் சேர்ந்தவர்களோ இக்கட்சிகளுக்குத் தலைவர்களாக வரமுடியாது.

சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா பௌத்த 'கொயிகம' சிங்களவர். 'கொயிகம' என்பது தமிழரின் வேளாள குலத்துக்கு சமமானது. இக்கட்சியிலுள்ள டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா ஒருபோதும் தலைமைப் பீடத்துக்குவரமுடியாது ஏனென்றால் அவர் தாழ்ந்த குலத்தவர்.

கம்யூனிஸ்ட் (மொஸ்கோ) கட்சிக்கு மிகவும் பாடுபட்டுழைத்தவர் பீட்டர் கெனமன். ஆனால் அவர் பறங்கியர், கிறிஸ்தவகுடும்பத்தில் வந்தவர். ஆகையால் அவர் ஒருபோதும் அக்கட்சியில் தலைவராக மாட்டார். எனவே சிங்கள பௌத்த, 'கொயிகம' வகுப்பைச்சேர்ந்த டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கியே கம்யூனிஸ்ட் கட்சியின் நிரந்தர தலைவர்.

கம்யூனிஸ்ட் (பீகிங்) கட்சிக்கு மிகவும் பாடுபட்டுழைப்பவர் என். சண்முகதாசன். ஆனால் பாவம், அவர் ஒரு தமிழர். ஆகையால் அவர் அக்கட்சியின் தலைமைப் பதவிக்கு அருகதையற்றவர். சிங்கள, பௌத்த, 'கொயிகம' வருணத்தினரான என். டி. பண்டாரநாயகாவே அதற்குத் தகுந்த தலைவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து பிரிந்துவிட்ட என். டி. பண்டாரநாயகா விரைவில் பீகிங் கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கள அரசியல் தலைவர்கள் தமக்குள்ளேயே மதம், குலம், இனம் என்ற பேதங்களை வளர்த்துவரும்போது, தமிழ் மக்களிடையே நிலவுவதாகக் கூறப்படும் சாதி பேதங்களை அளவுக்குமிஞ்சி பெரிதாக்குவது எதற்காகவோ தெரியவில்லை.

முதலில் தன் சொந்த வீட்டைத் திருத்திக்கொண்டல்லவா பிறரைத்திருத்த முற்படவேண்டும்.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுருக்கம்

### ஆயுட்காலம் நீடிப்பு

பொலநறுவைப் பகுதியிலுள்ள மன்னம்பிட்டி எகொடபத்து கிராமசபை தேர்தலை ஸ்தல ஸ்தாபன அமைச்சர் ரத்துசெய்து, அதன் ஆயுள் காலத்தை டிசம்பர் 31ந்தேதிவரைநீடித்துள்ளார். இச்சபையின் எல்லைகள் சம்பந்தமாகவும் வட்டார அபிவிருத்திகள் சம்பந்தமாகவும் நடவடிக்கை மேற்கொள்ளவே தேர்தல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

### யூனியன்கள் கூடுகிறது

சம்பள முரண்பாட்டுக் கமிட்டி தெரிவித்த சிபார்சுகளைக் கொண்டு மந்திரிசபைக்கு ஒரு மகஜர் சமர்ப்பிக்கப்படும் என்று சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. சி. பாலசிங்கம் அளித்த வாக்குறுதியைத் தொடர்ந்து வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதா என்பதுபற்றி ஆராய்வதற்காக இப்பொழுது வேலை நிறுத்தத்திலுள்ள இரண்டு வைத்திய ஆய்வுகூட ஊழியர் யூனியன்களும் கூடுகின்றன.

### எம். பியின் கடிதம்

கல்குடாத் தொகுதியின் பிரதான பஸ் நிறுத்தும் நிலையங்களுக்கு பஸ் சாவடிகள் அமைக்கும்படி கல்குடா எம். பி. திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் இலங்கைப் போக்குவரத்துச் சபைத் சபைத்தலைவரைக் கேட்டுள்ளார். மழை, வெய்யில் காலத்தில் பிரயாணிகள் தரித்து நிற்பதற்கு வசதியின்றிக் கஷ்டப்படுவதையும் திரு. தேவநாயகம் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### பிரதமரின் பேச்சு

"இந்நாட்டில் ஜனநாயகம் புதைக்கப்பட விருந்தால் அது எனது பிரேதத்திற்கு மேல்தான் புதைக்கப்படலாம். சர்வாதிகார ஆட்சிக்கு நான் அடிகோலுவதாக எனது எதிரிகள் சிலர் என்மீது குற்றஞ்சாட்டுகின்றனர். இவர்களே இதற்கு திட்டமிடுவதாக இருக்கக்கூடும். எனபிரதமர் டட்லிசேன நாயக்கா அம்பாறையிலுள்ள மக்கள் ஐக்கிய முன்னணியினர் வருடாந்தக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

### அமைச்சு வற்புறுத்து

மருந்துகளை புதிய கட்டுப்பாட்டுவிலைக்கு விற்க வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ள மருந்து இறக்குமதியாளர்கள் விலைக்கட்டுப்பாட்டுக்கு முன்பான விலைகளின் அடிப்படையில் சுங்கத்தீர்வைகள் செலுத்த வேண்டுமென சுகாதார அமைச்சு வற்புறுத்தியுள்ளது. பல மருந்து இறக்குமதியாளர்களுக்கு இதனால் பெருந் தொகையான பண நஷ்டம் ஏற்படுமென்றுமருந்து வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

### வயோதிபர் விடுதி

தெசெந்தேனியாவில் அறுபத்துமூவாயிரம்ரூபாய்செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வயோதிபர்விடுதியை பிரதம மந்திரி திரு. டட்லி. சேனநாயக்கா இம் மாதம் 28-ம் திகதி திறந்து வைப்பார். இவ்வைபவத்தில் சமூகசேவை அமைச்சர் திரு ஆசோக கருணரத்ன, சமூக சேவை டைரக்டர் ஆகியோரும் கலந்து கொள்வர்.

### எம். பிக்கு சவால்

நீர்கொழும்பு எம்.பி.திரு. டென்ஸில் பெர்னாண்டோ அவரது பதவியை ராஜினாமாச்செய்து தனிப்பட்ட பாடசாலைகளின் பிரச்னை மீது மீண்டும் போட்டியிடுமாறு இங்கு நடந்த ஒரு கூட்டத்தில் சவால் விடுக்கப்பட்டது குரணையில் நடந்த கத்தோலிக்க மக்களின் கூட்டத்தில் திரு. நியூட்டன் ஜயமன்ன இந்த சவாலை விடுத்தார்.

### தென்னங்கள் சாராயம்

தமிழ் சிங்களப் புதுவருடத்திற்கு முன்னைய வருடங்களைப் போல் தென்னங்கள் சாராயம் கிடைக்கவிருக்கிறது. நாடு பூராவிலும் உள்ள எல்லாத் தவறணைகளிலும். ஏப்ரல் 6-ம் திகதியிலிருந்து தென்னங்கள் சாராயம் விநியோகம் செய்யப்படும். இந்தச்சாராயம் ஒரு கிழமைக்கு தொடர்ந்து விற்பனை செய்யப்படுமென காலால் கமிஷனர் திரு.எம். பி.திசநாயக்கா தெரிவித்தார்.

### பெண் ஆஜராகவில்லை

திருமணமாகாத கன்னிப் பெண் அழகான குழந்தையொன்றை பெற்றெடுத்து அதை தியத்தலாவையிலிருந்து மூன்று மைல்களுக்கப்பாலுள்ள காட்டில் தவிக்கவிட்டுச் சென்றது சம்பந்தமாக, பொலிஸார் பண்டாரவளையில் அப் பெண்ணை கைது செய்துள்ளனர். பின்பு பொலிஸாரால் பிணையில் விடப்பட்ட அப்பெண் வழக்கன்று கோர்ட்டில் ஆஜாராகவில்லை. பண்டாரவளை நீதிபதி திரு. ஜே. சேனாதிபதி வாறண்ட் பிறப்பித்துள்ளார்.

---

## வேலை அனுபவ திட்டம்

உடுவில். திங்கள்

சகல பாடசாலைகளிலும் வேலை அனுபவ வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கல்வி அமைச்சர் ஐ எம். ஆர். ஏ. இரியகொல்லை உத்தரவு பிறப்பித்துள்ளார்,

வேலை அனுபவத் துறையின் பொறுப்பதிகாரியாகவும் உதவி வித்தியாதிபதியாகவும் இருந்து வரும் திரு வி. துரைசிங்கம் இதுசம்பந்தமான சுற்றறிக்கையினை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளாராம்.

வேலை அனுபவ வகுப்புகள் எல்லாப் பாடசாலைகளிலும் அடுத்துவரும்தவணை ஆரம்பத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது, கல்விமந்திரியின் இத்திட்டம் நிறம்படச் செயல்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதில் திரு.வி. துரைசிங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

---

## செந்தமிழ்......

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

படுகின்றது. இவர் சொற்பொழிவுகள் தர்க்கங்கள் நடாத்துவதில் மட்டுமன்றி அறிஞர்கள் மன்றத்தில் அட்டாவதானம், சதாவதானம் முதலியவற்றைச் சிறப்பாகச் செய்து எல்லோரினதும் பாராட்டுகளையும் பெற்றார்.

புலவர் ஒலி என்று அன்று விளங்கிய (புலோலி) பெயருக்குக் காரணமாக விளங்கிய புலவர்களில் சிறப்புடையவராக புலவர் நா. கதிரைவேற்பிள்ளை விளங்கினார். இவ்வாறு செந்தமிழ் ஓங்கிட சிவநெறி தழைத்திட உழைத்துத் தேசு பெற்ற சதாவதானம் கதிரைவேற்பிள்ளையவர்கள் நீலகிரியில் 1907-ல் தமிழகமெல்லாம் கண்ணீரை ஆறுகப் பெருக்கிட மண்ணுலகை நீத்தார்.

---

## விரைவில் மார்க்கெட் வேலைகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் நவீன சந்தைக்கான ஆரம்ப வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. சந்தை கட்டப்படவிருக்கும் காணியில் கடைகள் வைத்திருப்பவர்கள் அவைகளை ஒரு வார காலத்தில் அகற்றுவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் இவ்வியாபாரிகளுடன் மாநகரசபை விசேஷ ஆணையாளர் நடாத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டது. புதிய பஸ் நிலையத்துக்கு கிழக்குப் புறமாக அமைக்கப்பட்டுள்ள தகரக் கொட்டகைகளில் இவ்வியாபாரிகள் தற்காலிகமாக தமது கடைகளை அமைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(கா. நி.)

---

## போவை கி. ச. தேர்தல்

### 3 வட்டாரங்கள் போட்டி இல்லை

புத்தளம், திங்கள்

போவைச் சேர்ந்த விஜயராஜபகுதி கிராமசபைத் தேர்தல் நியமனப்பத்திரம் தபோவைக் கிராமசபைக் காரியாலயத்தில் புத்தளம் கச்சேரி தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 12 வட்டாரங்களில் 7, 11, 12 ஆகிய மூன்று வட்டரரங்களில் அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

# பாடசாலை மாணவரிடையே கதை, கவிதைப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

ஆசியா பவுண்டேஷன், பிரிட்டிஷ்கவுன்ஸில்போன்ற வெளிநாட்டு ஸ்தாபனங்கள் ஏனைய நாடுகளில் போல இலங்கையிலும் தமிழ் இலக்கிய கல்வித் துறைகளில் உதவியளிக்க முன்வர வேண்டுமென்றும் மற்றும் நாடுகளில் தமிழ்த் துறையில் உதவும் இந்நிறுவனங்கள் இலங்கையிலும் விகிதாசார அடிப்படையில் தமிழ்த்துறையில் உதவியளிக்க முன்வர வேண்டுமென்றும் கோருவதென்ற தீர்மானம் யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்ற இலக்கியக் குழுவின் முதலாவது செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. குழுத்தலைவரான 'மஹாகவி' தலைமையில் யாழ். செயலக உரையாட்டு மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவரிடையே இலக்கிய அறிவை வளர்க்கும் பொருட்டு சிறுகதை, கவிதைப் போட்டிகளை வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்துவதெனவும் மன்ற இலக்கியக்குழு தீர்மானித்தது.

மேலும் இவ்வருடத்திற்கான செயல்திட்டங்கள் பற்றி ஆராய்ந்த குழு, பாஅரங்கு, கதைஅரங்கு, நாடக அரங்கு, ஆய்வரங்கு, போன்றவற்றை மாதந்தோறும் நடத்துவதெனவும் ஈழத்தில் தமிழ் இலக்கிய விமர்சனத் துறையை வளர்க்கும் பொருட்டு விமர்சனக் கட்டுரைப் போட்டியொன்றினை அகில இலங்கை ரீதியாக நடத்திப் பரிசில்கள் வழங்குவதெனவும் தீர்மானித்தது.

அண்மையில் காலஞ்சென்ற எழுத்தாளர்களான திரு. அ. ந. கந்தசாமிக்கும் தாழையடி சபாரத்தினத்திற்கும் கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

(கா. நி.)

# உள்ளூர் மீனவர் பாதிப்பதற்கு காரணம்

யாழ்ப்பாணம், செவ்.

'அரசாங்கம் வருடத்தில் 45 கோடி ரூபாவிற்கு கருவாட்டை இறக்குமதி செய்வதால், உள்ளூர் மீனவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் டின் மீன்களையும், இறக்குமதி செய்வதால் உள்ளூரில் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.'

பருத்தித்துறையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்ற மீனவர் நூற்றுக்கணக்கான மீனவர்களை எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களைப் பற்றி குறிப்பிடுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மீன்பிடி உபகரணங்களை சங்கங்கள் மூலம்தான் மீன்பிடி கூட்டுஸ்தாபனம் வழங்கிவருகிறது. இதனால் மீனவர்களுக்கு எவ்வித பயனுமில்லை. சங்கத்திலுள்ள 22 அங்கத்தவர்கள் வலைகளுக்கு விண்ணப்பித்தால் 2 வலைகள் மட்டுமே கிடைக்கின்றன.

யந்திரப்படகுகளின் உதிரிபாகங்கள் கிடைக்காததால் பல படகுகள், சேவையிலீடுபட முடியாமலிருக்கின்றன. இதனால் எஞ்சின்கள் துருப்பிடித்திருக்கின்றன.

# பிரிவின்றி இயங்குவது தொழிலாளர் கழகம்

## அட்டனில் தர்மலிங்கம் எம். பி.

நாவலப்பிட்டி, திங்

'ஜனநாயகப்படி காலத்திற்கு காலம் ஒரு கட்சியின் அல்லது தொழிற்சங்கத்தின் தலைமைபீடம் மாறவேண்டும் ஜனநாயகப்படி இயங்குவது இலங்கை தொழிலாளர் சங்கமும், அதன் உருவான தமிழரசுக் கட்சியுமே. யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், மலைநாட்டான் என்ற பிரிவின்றி தமிழன் என்ற நோக்குடன இயங்குவதே தமிழரசுக் கட்சியின் தனிக் கொள்கை.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் கழக 4-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் அட்டன் செ.ன். ஜோன் பொஸ்கோ கல்லூரியில் நடைபெற்ற போது, நடப்பு வருட தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட உடுவில் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் மற்றும் வடபகுதி பாராளுமன்ற அங்கத்தவர்களான திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. வி. என். நவரட்னம், திரு எஸ். கதிரவேல்பிள்ளை செனட்டர் நடராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"நாணயமதிப்புக் குறைப்பால் மாதாந்த சம்பளம் பெறும ஊழியர்கள் கடுமையாக பாதிக்கப்பட்ட கடந்த ஆண்டு நமது நாட்டுக்கு மிக சோதனை மிகுந்த ஆண்டாக விருந்தது. இதனை ஈடு செய்யவே அரசாங்க ஊழியர்கட்கு இருபது ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. இந்நிலை [illegible] டவர்களான தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை எவரும் சிந்திக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் தோட்டத் தொழிலாளர்கட்கும் சம்பள உயர்வு வழங்கும்படி இ. தொ. க. சார்பில் இ. த. அ. கட்சியே முதல் முதல் அரசாங்கத்தை கோரியது."

"தமிழ் குழந்தைகட்குத் தமிழ்தான் போதனு மொழியாக இருக்க வேண்டும் என்றே அரசாங்கத்தை தமிழரசுக் கட்சி கேட்டுக் கொண்டது. இதற்கு மாறாக அரசாங்கம் நடந்திருக்குமானால் அதனை விட்டு வெளியேறவும் நாம் தயங்கி இருக்க மாட்டோம்.

சாவகச்சேரி (பா. உ.) திரு. வி. என். நவரட்னம் தலைமையில் இடம் பெற்ற இக் கூட்டத்தில் செனட்டர் திரு. நடராஜா, திரு. சாமன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள்.

---

## எரிந்து இளம்பெண் மரணம்

யாழ்ப்பாணம், செவ்

எரிகாயங்களுடன் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஜெபரான்ஸ் என்ற 20 வயது இளம்பெண் ஆஸ்பத்திரியில் நேற்று மரணமானார். மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினர்.

(கா.நி)

---

## இளைஞரின் பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், செவ்.


வானொலிப் பெட்டிக்கு 'ஏரியல்' கட்ட மரத்தில் ஏறிய வாலிபர்ஒருவர்தவறி வீழ்ந்து மரணமானார். இப் பரிதாபகரமான சம்பவம் ஆனைக்கோட்டையில் உயரப்புலம் என்ற இடத்தில் நேற்று நடைபெற்றது.

மரணமான பிரான்சிஸ் காணிக்கைநாதனின் (18 வயது) மரணம்பற்றி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரண விசாரணை நடத்தினர். மரணமானவர் வளவிலுள்ள பனைமரத்தில் 'ஏரியல்' கட்ட ஏறியபோது தவறி வீழ்ந்ததாகவும் காரில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவருகையில் மரணமானதாகவும் மரணவிசாரணையில்சாட்சியமளித்த கிரிசாந்து தெரிவித்தார்.

மரணமானவரின் தாயான திரவியமும் சாட்சியமளித்தார். ஆனைக்கோட்டை பொலிசார்சாட்சிகளை ஆஜர் செய்திருந்தனர். டாக்டர் ஞானசுந்தரம் இறந்தவரைப் பிரேத பரிசோதனை செய்தார்.

கா. நி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரம்பன் ஊர்காவற்றுறை கூட்டுறவு ஆஸ்பத்திரியில் பிறந்த முதல் குழந்தை இதுதான். 7 ருத்தல் நிறையுள்ள இக்குழந்தை புதிய பிரசவ வார்ட்டில் பிறந்தது. சகல நவீன வசதிகளுடனும் கூடிய இந்த ஆஸ்பத்திரி டாக்டர் வி. செல்வரத்தினத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது.

### வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்க்க

# உள்ளூராட்சி சபைகள் 25 வீத வருமானத்தை உதவ வேண்டும்

## உடுவில் கிராம சபை யோசனை

உடுவில், திங்கள்

"நாட்டில் இன்று நிலவிவரும் வேலையில்லாத்திண்டாட்டத்தினைப் போக்குவதற்கு மத்திய அரசாங்கம் பல துறைகளிலும் முயன்றுவருகின்றது. இவ்வேளையில் உள்ளூராட்சி சபைகளும் தத்தம் வருமானத்திலிருந்து 25 சத வீதவருமானத்தினை உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று நாட்டில் நிலவும் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க உபயோகிக்க முன்வரவேண்டும். இதனால் வேலையில்லாப் பிரச்னை ஓரளவு தீர்க்கப்படுவதுடன் மத்திய அரசாங்கத்தின் கொள்கைக்கும், ஒத்தாசை உதவியளிப்பதாயுமிருக்கும். இத்திட்டம் ஏனைய உள்ளூராட்சிச்சபைகளுக்கு வழிகாட்டியாய் இருக்கும்.

இவ்வாறு குறிப்பிடும் தீர்மானம் ஒன்று உடுவில்கிராம சபையில ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இப்பிரேரணையை 2-ம் வட்டார அங்கத்தவர் திரு. நா. சின்னத்துரை பிரேரித்தார். முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. வீ. சீராளசிங்கம் இதனை ஆமோதித்தார்.

முடிக்குரிய வளக்கறிஞரும், சமாதான நீதிபதியும் உத்தியோகப் பற்றற்ற நீதவானுமாகிய திரு. வீ. நவரத்தினராசாவின் அகால மரணம் குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. அன்னாரின் குடும்பத்துக்கு ஓர் அனுதாபச்செய்தியை அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### மீண்டும் பரிசோதனை முகாம்கள்

இமையாணன், திங்கள்

கள்ளக்கடத்தலைத் தடுக்கும் முகமாக மீண்டும் வட பகுதியில்பரிசோதனைமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்ற சனிக்கிழமை இரவு தொடக்கம் வல்லைப் பாலத்தில் வல்வெட்டித்துறைப் பொலிசாரும், தொண்டமனாறு பாலத்தில் காங்கேசன்துறைப் பொலிசாரும் முகாமிட்டு, வாகனங்களை மறித்துப் பரிசோதித்துவருகின்றனர்.

பகல் இரவாகதொடர்ந்து நடைபெறும் இப்பரிசோதனை நிரந்தரமாக தொடர்ந்து இருக்கும் எனத்தெரிய வருகிறது.

### சேதம் பற்றி பொலிஸார் கவனிப்பர்

காங்கேசன்துறை, திங்.

மயிலிட்டி சந்தைக் கட்டடத்துக்கு அருகாமையிலுள்ள பட்டினசபைக்குரிய இணற்றை சிலர் உடைத்து சேதம் விளைவித்து பலர் குளிக்க முடியாது தடுத்துள்ளதாக மயிலிட்டி கண்ணகி படிப்பகத்தினர் காங்கேசன்துறை பட்டின சபை தலைவருக்கு செய்த புகார் சம்பந்தமான விஷயம் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் விவாதத்துக்கு எடுக்கப்பட்டது.

இறுதியில் இது சம்பந்தமான நடவடிக்கையை பொலிசாருடன் விடுவதாக கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டது.

### மோசடி வழக்கு

வல்வெட்டித்துறை, திங்கள்

கடந்த வருடம் மாசிமாதம் 20-ந் திகதி பருத்தித்துறை பல நோக்குச்கூட்டுறவுச் சங்கக்கடை மனேச்சரிடம் கிருமிநாசினிமருந்து எனச் சொல்லி தண்ணீர் நிரப்பிய பன்னிரண்டுபோத்தல்களை ரூபா 174 க்கு ஏமாற்றிப் பணம் பெற்றதாக விசேஷ குற்றத்தடுப்புப் பகுதிப் பொலிசாரால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். சத்தியநாதன் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கை பருத்தித் துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வின்னராசா அடுத்த மாதம் 37-ம் திகதிக்கு விசாரணைக்காக ஒத்திவைத்துள்ளார்.

### குளிக்க முடியவில்லை

காங்கேசன்துறை, திங்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஏற்பட்டிருக்கும் தண்ணீர் கஷ்டம்இங்கு பயிற்சிபெறும் ஆசிரியர்களை நாட்கணக்காக குளிக்காது வைத்துள்ளது.

இங்குள்ள நீர் விநியோகிக்கும் மோட்டார் இயந்திரம் பழுதடைந்துள்ளதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நாட்கள்பலவாகியும்இந்த இயந்திரத்தை திருத்த நடவடிக்கை எடுக்கப்படா [illegible] துள்ளனர்.

### மாதர் முன்னேற்றச் சங்க தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், செவ்.

புத்தூர் கிழக்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் குருநாதர், நெசவு நிலையத்தில் திருமதி சத்தியவாணி துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது. மேற்படி சங்க நிர்வாகக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குருநாதர் நெசவு நிலையத்தை நோக்கி வரும் ஒழுங்கையை சிரமதானம் மூலம் திருத்த நடவடிக்கை எடுத்தல்.

மாதர் சங்க வளவில் பின்னல், வெங்காயக் கூடை இழைத்தல் ஆகிய தொழில்களை விருத்தி செய்ய ஒரு கட்டிடம் அமைத்தல் வலி கிழக்கு காரியாதிகாரி வாயிலாக யாழ். அரசாங்க அதிபரை நிதி ஒதுக்கித் தருமாறு கோருதல். [கா. நி]

### ரூபா 400 அபராதம்

குரும்பசிட்டி, திங்கள்

தமது தோட்டத்தில் சட்டவிரோதமாக 121 கஞ்சாச் செடிகளை பயிரிட்டதாக போயிட்டியைச் சேர்ந்த எம். சுப்பர் அவரது மகன் மார்க்கண்டு ஆகிய இருவர் மீதும் காங்கேசன் துறைப் பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தியினால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணையின் போது முதல் எதிரியான சுப்பர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதிபதி ரூபா 400 அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.

இரண்டாவதுஎதிரி இதையடுத்து விடுதலைசெய்யப்பட்டார். கைப்பற்றப்பட்ட கஞ்சா செடிகளைப் பொலிசார் நீதிமன்றத்தில்வைத்து தீயிட்டுச் சாம்பலாக்கினர்.

### மாதா கோவிலில் தீப்பற்றியது

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறையில் இருந்து சுருவிலுக்குச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளதேவமாதாகோவிலில் சென்ற கிழமை திடீர் நெருப்புப் பற்றிக்கொண்டது. இதனால் பல ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

### திருடியவருக்கு 6 மாத கடூழியம்

குரும்பசிட்டி, திங்கள்

திருட்டு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட எதிரிக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் ஆறுமாதக் கடூழியச்சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ் மண்டலம் என்பவருக்குச்சொந்தமான ரூபா 95 பெறுமதிவாய்ந்த கைக்கடிகாரம், சேலைகள் ஆகிய பொருட்களை களவாடியதாக சுன்னாகம் பொலிசார் தெல்லிப்பழையைச்சேர்ந்த கே. செல்வராசா என்பவர் மேல் குற்றம் சுமத்தி இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையச் இன்ஸ்பெக்டர் திரு. எம். வீ. குணரத்தின வழக்கை பொலிஸ் தரப்பில் நடத்தினார்.

### பதவி உயர்வு

யாழ்ப்பாணம், செவ்.

காணி நீர்ப்பாசன, மின்சார இலாகாவில் சுருக்கெழுத்தாளராகக் கடமையாற்றிய திரு. ஏ. சண்முகநாதன் கடற்படைத்தளபதி திரு. ராஜன் கதிர்காமரின் உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் அந்தரங்க சுருக்கெழுத்தாளராகவும்கடமையாற்றிய இவர், யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கக் காரியதரிசியாகக் கடமையாற்றினர். இவர் இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தில் தராதரம் பெற்ற மத்தியஸ்வருமாவர். இலங்கை அமைச்சூர் விளையாட்டுக் கழக அங்கத்தவரான இவர் விளையாட்டு, பொது விவகாரங்களில் அக்கறைகொண்டவர். [கா. நி.]

### ஆசிரியர்களின் சுற்றுப் பிரயாணம்

காங்கேசன்துறை, திங்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிஆசிரியர்கள் அடுத்த முதல் பருவ விடுமுறைக்கு இலங்கைச் சுற்றுப் பிரயாணத்தை மேற் கொள்கிறார்கள். இவர்கள் பேராதனை, சிகிரியா, சிவனொளிபாதம் போன்ற இடங்களுக்கு விஜயம் செய்வார்கள்.

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

**வினாக்கள்**

1. ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியார்?
2. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அதிபர் யார்?
3. இலங்கையின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தலைவர் யார்?
4. பொதுநல நாடுகளைத் தலைமை வகிப்பவர் யார்?
5. வித்தியோதய பல்கலைக் கழகம் எங்கமைந்துள்ளது?
6. இலங்கையின் உணவுக் கமிஷனர் யார்?
7. நெப்போலியன் இறந்த தீவின் பெயர் யாது?
8. இ. போ. ச.வின் தலைமைக் காரியாலயம் எங்குள்ளது?
9. ஐ நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் எத்தனை?
10. இலங்கையின் வியாபார வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி யார்?
11. உலக வங்கியின் தலைவர் யார்?
12. சூரியனுக்கு மிக அருகிலுள்ள கோள் எது?
13. திவ்வியஜீவன சங்கத்தின் [D. L. S.] தலைமைப் பீடம் எங்குள்ளது?
14. ஒல்லாந்தர் இலங்கையை எவ்வாண்டிலிருந்து ஆண்டார்கள்?
15. நீர்ப்பாசனப்பகுதியின் அதிபதி [Director of Irrigation] யார்?

[விடைகள் 7-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப்பகுதி

# உதை பந்தாட்டப் போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, திங்கள் யாழ்ப்பாணம் புனிதவளன் விளையாட்டுக் கழகத்திற்கும் ஊர்காவற்றுறை றேஞ்சாஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் சென்றவாரம் புனித அந்தோனியார் கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற விறுவிறுப்பான உதைபந்தாட்டப் போட்டியில் அநேகம் கோல் அடிக்கும் சந்தர்ப்பங்களை றேஞ்சர்ஸ் கழகம் இழந்ததினால் விளையாட்டு ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. இடைவேளைக்கு முன்னர் இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல்கள் போட்டன. இடைவேளையின் பின்னர் புனிதவளன் கோஷ்டியினர் துரிதமாக விளையாடி மேலும் ஒருகோலைப் போட்டனர். போட்டியின முடிவில் 2—1 கோல்களால் புனிதவளன் கோஷ்டி வெற்றிபெற்றது: இப்போட்டிக்கு தீவுப்பகுதி விளையாட்டு அதிகாரி திரு. பே. பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இதனைப்பின் புனிதவளன் விளையாட்டுக்கழக 'ஏ' குழுவினரும் ஊர்காவற்றுறை ஐக்கியவிளையாட்டுக்கழகத்தினரும் கலந்துகொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இடைவேளைக்கு முன் புனிதவளன் ஒரு கோல் போட்டிருந்தது. இடைவேளையின் பின்பு ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரிடையே அதிக உற்சாகம் காணப்பட்டது: ஊர்காவற்றுறை கோஷ்டியைச் சேர்ந்த வலதுவெளி வீரர் திரு சூசைபாலன் துரிதமாகவும் வகுலாவகமாகவும் பந்தை எடுத்துச் வசன்று ஒருகோலை விளாசி ரசிகர்களின் பாராட்டைப் பெற்ருர். இப்போட்டி ஆரம்பம் முதல் முடிவுவரையும் விறுவிறுப்பாக காணப்பட்டபோதும் புனிதவளன் விளையாட்டுக் கழகத்தினரின் அபார விளையாட்டால் ஊர்காவற்றுறை விளையாட்டுக் கழகத்தினர் ஒரு கோலால் தோல்வியடைந்தனர்.

---

## இடமாற்றம்

உடுவில், திங்கள் காங்கேசன் துறைபொலிஸ் போக்குவரத்து சார்ஜண்டாக கடமையாற்றி வரும் ஏ. கிருஷ்ணராசா ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து கரையூர் பொலிஸ் நிலையத்திற்கு அடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வலிவடக்கு

## விளையாட்டுச் சங்க போட்டிகள்

உடுவில், திங்கள் வலிகாமம் வடக்கு விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டி இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பமாகின்றது. இவ் விளையாட்டு சங்கத்தில் உள்ள எட்டு கிராம சேவையாளர் பகுதி மக்களும் இப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள் யாழ்ப்பாண மாவட்ட காரியாதிகாரிப் பிரிவுக்கிடையே நடைபெறும் போட்டிகளிலும், அகில இலங்கை மாவட்டங்களுக்கிடையே நடைபெறும் போட்டிகளிலும் பங்கு பற்ற முடியும.

உடுப்பிட்டி வட்டார

## பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி

இமையாணன், திங்கள் உடுப்பிட்டி வட்டார 'பி' பிரிவு பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டிஎதிர்வரும் புதன்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

சுமார் நாற்பத்திரண்டு பாடசாலைகள் கலந்துகொள்ளும் இவ்விளையாட்டுப் போட்டியில் உடுப்பிட்டி எம்.பி யும், உபசபாநயகருமான திரு. மு. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வாரெனத் தெரியவருகிறது.

## நிவாரணம் வழங்கப்படவில்லை

ஊர்காவற்றுறை. திங்கள் கடந்த வெள்ளப்பெருக்கு கஷ்ட நிவாரணம்புங்குடுதீவு மக்களுக்குஇன்னும்கிடைக்கவில்லை. இதனால் இங்குள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள். நிவாரணம் கொடுக்க வேண்டுமென புங்குடுதீவு கிராம சபை அரசினரைக் கேட்டுள்ளது.

## காந்திஜி கழகம் வென்றது

ஊர்காவற்றுறை, திங்கள் புளியங்கூடல் மகாமாரி சனசமூகநிலையம் நவரத்தினம் எம். பி. கேடயத்துக்காக நடாத்தும் கரபந்தாட்டப் போட்டியில், தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும், புங்குடுதீவு சிவலைப்பட்டி சனசமூகநிலையமும் சென்றவாரம் கலந்துகொண்டன.

இப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூகநிலையத்தைத் தோற்கடித்தது.

புள்ளி விபரம் 16- 14 -15 9 தம்பாட்டி குழுவைச் சேர்ந்த மார்க்கண்டுவின் விளையாட்டு போற்றக்கூடியதாக இருந்தது.

---

## இம்முறையும் முதலிடம்

உடுவில், திங்கள் அண்மையில் நடைபெற்ற 'அ' பிரிவுப்பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகளில் 16 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவிலும், 13 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவிலும் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் முதலிடத்தைப்பெற்றுள்ளார்கள்.

கடந்தவருடத்திலும்மேற்படிமகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 'அ'ன்பிரிவு மாணவர்களும் மாணவிகளும் முதலிடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

---

## ஆலோசனை கூட்டம்

யாழ்ப்பாணம், செவ். அடுத்தவருடம் கொண்டாடப்படவிருக்கும் மகாத்மாகாந்தியின் நூருவது ஆண்டுவிழாவை முன்னிட்டு நாளை நாலை அரசாங்க செயலகத்தில் முதலியார் திரு. செ.சின்னத்தம்பி தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டம் அகில இலங்கை காந்தி சேவா சங்க ஆதரவில்நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## மீண்டும் விஜயம்

உடுப்பிட்டி, திங். கண்டி பௌத்த மத பீடத்தைச் சேர்ந்த ஸ்ரீ நாரத மகாநாயக்கதேரோ மீண்டும் வடபகுதிக்கு விஜயம் செய்ய விருக்கின்ருர். அடுத்த மாதம் 5-ம் திகதி யாழ்ப்பாணம் வரும் ஸ்ரீ நாரத தேரோ சங்கானைக்கும் விஜயம் செய்வார். அங்கே அவர் பௌத்த விகாரையொன்றுக்கான அடிக்கல்லை நாட்டுவார் எனத் தெரியவருகிறது.

---

## இடமாற்றம்

அடம்பன், திங்கள் முசலிப்பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தராக மட்டக்களப்பில் கடமையாற்றிய திரு. ரி. குமாரசாமி அடுத்தமாதம்தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

## நீச்சல் பயிற்சி

ஊர்காவற்றுறை. செவ் தீவுப்பகுதி இளைஞர்களுக்கு தேசிய நீச்சல் பயிற்சி போதனாசிரியர் திரு. டிடமனால் நீச்சல்பயிற்சி வகுப்பு இன்று நடத்தப்படவிருக்கிறது.

ஊர்காவற்றுறையில் நடத்தப்படவிருக்கும்இவ்வகுப்புக்கான ஒழுங்குகளை தீவுப்பகுதி விளையாட்டு உத்தி [illegible] செய்துள்ளார்.

# வடமாகாண ஆசிரியர் சங்கம் நடாத்திய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ். வடமாகாண ஆசிரியர்சங்கம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இம்மாதம் 20, 21ம திகதிகளில் நடத்திய கட்டுரை, பேச்சு, சங்கீத போட்டி முடிவுகள் விபரம் வருமாறு:—

### ஆங்கிலம்

மாணவர் [பேச்சு]

அதிசிரேஷ்டபிரிவு: 1. என். சிறிகாந்தா [யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி], 2. எஸ். குணநாயகம [ஹாட்லி கல்லூரி], 3. பி சிறிறஞ்சன் [ஹாட்லி கல்லூரி]

சிரேஷ்டபிரிவு: எஸ்.சுரேந்திரன் [யாழ் மத்திய கல்லூரி], 2 ஈ எம். குமார் [மகாஜனாகல்லூரி], 3. மோகன் எஸ். திஸநாயகம் [யாழ்ப்பாணக்கல்லூரி].

மததியபிரிவு: வி செல்வச்சந்திரன் [சென்.ஜோன்ஸ் கல்லூரி, 2 என் சிவகுமார் [ஹாட்லி கல்லூரி], 3. கே. ஜெசுராசா [ஸ்கந்தவரோதயா]

கனிஷ்டபிரிவு: எஸ். எம். குணரத்தினம் [சென். ஜோன்ஸ் கல்லூரி], எஸ். வேலும்மயிலும [யாழ்ப்பாணம இநதுக்கல்லூரி], எஸ். சுரேஷ்குமார் [யூனியன்கல்லூரி].

### ஆங்கிலம்

மாணவிகள் [பேச்சு]

அதிசிரேஷ்டபிரிவு: 1. ஜெயந்திகட்சன் [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], 2. சாவித்திரி ஜெசுதாசன் [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி] 3. கிருபாநிதி சிநெல் [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி].

சிரேஷ்டபிரிவு: 1 வசந்தி எட்வாட்ஸ் [வேம்படிமாதர் கல்லூரி], 2 தயாள குமாரசாமி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], 3. சுலோச்சனு பொன்னையா [வேம்படி மகளிர் கல்லூரி].

மத்தியபிரிவு: 1. ரூபினி நவரத்தினராசா [சுண்டிகுளி மகளிர்கல்லூரி], 2. ஆர். சாந்தகுமாரி[யாழ்ப்பாணக் கல்லூரி], 3. ஏ. இந்திராவதி[மகாஜனு கல்லூரி]

கனிஷ்டபிரிவு: 1. சுகாந்தி கருணைந்தன் [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி] 2. ஆர் தயாளினி[யூனியன் கல்லூரி] 3.சுகந்தி ஹென்ஸ்மன் [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி]

### தமிழ்

மாணவர் [பேச்சு]

அதிசிரேஷ்டபிரிவு: 1. என். சிறிகாந்தா[யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி], 2 வி. லோகநாதன் [உரும்பராய் இந்துக்கல்லூரி], 3. என். கிருஷ்ணராசா [ஹாட்லிக்கல்லூரி].

சிரேஷ்டபிரிவு: 1. பி. தணிகாசலம் [மானிப்பாய் இந்துக்கல்லூரி], 2, கே. இராமதாஸ் [ஹாட்லி கல்லூரி], 3. ரி. ஜ. பாகஸ் [மானிப்பாய் இந்துக்கல்லூரி].

மத்தியபிரிவு: 1. என். சிவகுமார் [ஹாட்லிகல்லூரி], 2. எஸ்.சிறிதரன் [ஸ்கந்தவரோதயா], ஆர். ஈஸ்வரநேசன் [அரசினர் விக்ரோறியா கல்லூர்].

கனிஷ்டபிரிவு: 1. ஏ தேவானந்தன் [திருநாவுக்கரசுவித்தியாசாலை], 2.எஸ். சுந்தரேஸ்வரன் [மானிப்பாய் இந்துக்கல்லூரி] 3.பி. இரகுபதி[யாழ். இந்துக் கல்லூரி].

### தமிழ்

மாணவிகள்[பேச்சு]

அதிசிரேஷ்டபிரிவு: 1. சாவித்திரிநாராயணன் [சுண்டிக்குளி மகளிர்கல்லூரி], 2. வி.நவநிதி [ஸ்கந்தவரோதயா]. 3. ரி. தங்கராணி [அத்தியார் இந்துக்கல்லூரி]

சிரேஷ்டபிரிவு: 1.கே.சகுந்தலா [உடுப்பிட்டிமகளிர் கல்லூரி, 2. கே. கமலாதேவி [வட்டு. இந்துமகளிர் கல்லூரி] 3. என். கமலாதேவி [யூனியன் கல்லூரி.]

மத்தியபிரிவு: 1.ஏ. வரதலட்சுமி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) 2. வி. சாந்தி [மானிப்பாய் இந்துக்கல்லூரி] 3. ரி. எஸ். லோகசுந்தரி [ஸ்கந்தவரோதயா]

கனிஷ்டபிரிவு: 1.எஸ்.ரஞ்சனலீலா [சி. சி. தமிழ் பாடசாலைஇருபாலை] 2. கே. கலையரசி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) 3. பி. மைத்திரி (ஸ்கந்தவரோதயா)

### சங்கீதம்—மாணவர்

(வாய்ப்பாட்டு)

கனிஷ்டபிரிவு: 1. ஆர். இரகுபதி(தேவரையாளி இந்துக்கல்லூரி) 2. கே. ஜெயரமணன் (வட்டு இந்துக் கல்லூரி) 3 லக்ஸ்மண குமார் [அருணோதயாக்கல்லூரி]

சிரேஷ்டபிரிவு: 1. எஸ். சண்முகராகவன் (ஸ்கந்தவரோதயா) 2. எஸ். சிவஞானராசா [அருணோதயாக்கல்லூரி]3. எஸ். சிவானந்தராசா (அருணோதயாக்கல்லூரி).

### சங்கீதம்-மாணவிகள்

(வாய்ப்பாட்டு)

கனிஷ்டபிரிவு: 1. எஸ். சுப்புலக்ஷ்மி [கொக்குவில் இந்துக்கல்லூரி] 2. எஸ். ஜெனகா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி) 3. ஜி ரதிதேவி [வேம்படி மகளிர் கல்லூரி]

சிரேஷ்டபிரிவு: 1. கே. யசோதா [கொக்குவில் இந்துக்கல்லூரி]2. கே குகதாம்பாள் [கனகரத்தினம் வித்தியாலயம்] 3. எஸ். கலாநிதி [அருணோதயா கல்லூரி]

### சங்கீதம்-மாணவ

(கோஷ்டி)

கனிஷ்டபிரிவு:1. அருணோதயா கல்லூரி 2 ஸ்கந்தவரோதயா கல்லூரி. 3.தேவரையாளி இந்துக்கல்லூரி.

சிரேஷ்டபிரிவு: 1. ஸ்கந்தவரோதய கல்லூரி. 2. யாழ். மத்திய கல்லூரி. 3. அருணோதயா கல்லூரி

### சங்கீதம்-மாணவிகள்

(கோஷ்டி)

கனிஷ்டபிரிவு: 1. ஸ்கந்தவரோதயாகல்லூரி 2.வேம்படி மகளிர் கல்லூரி. 3. கொக்குவில்இந்துக்கல்லூரி.

சிரேஷ்டபிரிவு:1 அருணோதயா கல்லூரி. 2. மகாஜனு கல்லூரி. 3. ஸ்கந்தவரோதயா கல்லூரி.

### கட்டுரை-தமிழ்

மாணவர்:1. ரி.நடேசலிங்கம் [யாழ். இந்துக்கல்லூரி] 2. பி கனகராசா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி)3 எம். மகேந்திரராசா [விக்னேஸ்வரா கல்லூரி]

மாணவிகள்: 1. எஸ் ஈஸ்வரி[மகாஜனுக்கல்லூரி] 2. கே. பாலசரஸ்வதி [மெதடிஸ்தமகளிர் கல்லூரி]3.எல்கலைமகள் [வடமராட்சி இந்துக் கல்லூரி]

### கட்டுரை ஆங்கிலம்

மாணவர்: 1. ஏ. சி. எஸ். ஜெயரத்தினம் (சென் ஜோன்ஸ் கல்லூரி) 2. ஏ. ரோஸ் ரஞ்சன் (யூனியன் கல்லூரி) 3. எஸ். ரவீந்திரன் [மகஜனு கல்லூரி]

மாணவிகள்: எஸ். பொன்னையா[ வேம்படி மகளிர்கல்லூரி] 2. ரி. குமாரசாமி [சுண்டிக்குழி மகளிர் கல்லூரி] 3. எஸ். ஜெகதாசன் [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி]

### வெற்றிக் கிண்ணங்கள் கேடயங்கள

ஆங்கிலப்பேச்சு- சிரேஷ்ட பிரிவு: [சார். பி. இராமநாதன் கேடயம்] வசந்தி எட்வேட்ஸ் [வேம்படி ம

(8-ம் பக்கம் பார்க்க)

---

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

விடைகள்

1. ஜோர்ஜ் வாஷிங்டன் [George Washigton].
2. திரு. நெவில் ஜெயவீரா [Neville Jayewera].
3. பேராசிரியர் டி. ஏ. றணசிங்க [Prof. D. A. Ranasinghe].
4. மகாராணி [Queen].
5. கெங்கொடவில [Gangodavila].
6. திரு. பி. பி. வி. ஏ. ஜே.பி.செனரத்தின[B. P. V. A. J. P. Senaratne].
7. சென்ற். ஹெலெனு [St. Helena].
8. நாரகன்பிற்ற [Narehenpita].
9. 123.
10. திரு. பி. ஏ. சில்வா [P. A. Silva].
11. திரு. ரொபேட் எஸ். மெக்னமாரு [Robert S. Mcnamara].
12. புதன் [Mercury].
13. ரிஷிகேஷ், இமயமலை [Rishikesh, Himalayas].
14. 1658.
15. திரு. வீ. என். ரபஜரத்தினம் [V. N. Rajaratnam]

(அடுத்த மாதிரி வினவிடைகள் 2-4-68 இல் வெளிவரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் கற்குடா எம். பி. போட்டியின்றி தெரிவு

செங்கலடி, திங்கள்

முன்னாள் கற்குடா எம். பி.யான திரு. பி. மாணிக்கவாசகர் ஏறாவூர் வடக்கு கிராமசபைக்கு போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்.

மட்டக்களப்பு தேர்தல் அதிகாரி திரு. ஆர். ஐ. சி. குருப் முன்னிலையில் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டபோது முதலாம் வட்டாரமான செங்கலடி வட்டாரத்திற்கு திரு. மாணிக்கவாசகர் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்.

ஏனைய வட்டாரங்களில் போட்டியிடுவோர் விபரம் வருமாறு-

2-ம் வட்டாரம்: திரு த பொன்னுத்தம்பி, திரு வே கந்தையா, திரு சி சிவநேசராசா.

3-ம் வட்டாரம்: திரு வே செல்லையா, திரு இ தம்பிஐயா.

4-ம் வட்டாரம்: திரு க பூபாலபிள்ளை, திரு க கந்தப்போடி.

5-ம் வட்டாரம்- திரு இ நல்லதம்பி, திரு வ இராசையா.

சைமா.

6-ம் வட்டாரம்: திரு க சதாசிவம், திரு சு செல்லத்தம்பி, திரு சு பீதாம்பரம்.

7-ம் வட்டாரம்: திரு த கந்தசாமி, திரு பி குஞ்சித்தம்பி, திரு சு சிவஞானம், திரு ச சற்குணநாதம்.

8-ம் வட்டாரம்: திரு ம நாகப்பன், திரு க தம்பிராசா, திரு பி அமரசிங்கம், திரு கு நல்லதம்பி.

# தொழிலாளர் தொகையை அதிகரிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், செவ்.

சாவகச்சேரி நகரசபையின் வட்டாரங்கள் அதிகரிக்கப்பட்ட தேதவிர தொழிலாளர்கள் அதிகரிக்கப்படவில்லை. 8 வட்டாரங்கள் இருந்தபோது வேலை செய்ததொழிலாளர்களே, 11 வட்டாரங்களான பின்பும் வேலைசெய்கின்றனர்கள். எனவே தொழிலாளர் தொகையை கூட்டவேண்டும்.

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்க சாவகச்சேரிக்கிளையின் கூட்டம், உதயசூரியன் படிப்பகத்தில் நடைபெற்றபோது, மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிளைத்தலைவர் திரு. வி. பெரியான் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபை தொழிலாளர்களின் பிரச்னைகள் பற்றி, நகரசபைத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

10 வருடங்களுக்கு மேல் வேலைசெய்த தொழிலாளர்களை மாதச் சம்பளத்தில் அமர்த்த வேண்டுமென்றும், வீடுகளை திருத்திதரவேண்டுமென்றும், குடிநீர்வசதி செய்துதரவேண்டுமென்றும் கோரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## ஐரோப்பிய பௌத்த பிக்கு

உடுவில், திங்கள்

''ஜேர்மன் சாமி'' என அழைக்கப்படும் துறவி ஒருவர் இன்று கந்தரோடையிலுள்ள புதை பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு விஜயம் செய்தார். அங்கு நடைபெறும் புதை பொருளாராய்ச்சியைச் பார்வையிட்டார்.

காலிக்கு அண்மையிலுள்ள 'டொடன்டுவர்' என்ற பௌத்த விகாரையில் இருந்து இந்த ஐரோப்பிய பௌத்த பிக்கு சரித்திர பிரசித்தி பெற்ற ஸ்தலங்களை பாதயாத்திரை மூலம் பார்வையிட்டு வருகிறார். நயினாதீவுக்கு சென்று திரும்புகையில் தான் இவர் புதைபொருளாராய்ச்சி நிலையத்தைப் பார்வையிட்டார்.

## பார்லிமெண்டில்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எல்லாரும் தனிச்சிங்களத்திலே உரைநிகழ்த்தினர். டாக்டர் கொல்வின், உணவு மந்திரி திரு. எம். டி. பண்டா ஆகிய இருவர் இடைபிடையே தைகள் பேசிஆங்கிலத்தில் ஓரிரு வார்த்தைகள்.

யாழ்ப்பாணம் எம். பி.யும் தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார்.

மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனாப் இஸ்மாயில் லெப்பை மட்டும் தமிழில் நேற்றுப் பேசினார்.

## நெஸ்பிறே தேவையில்லையாம்

இரத்தினபுரி, திங்கள்

''விவியன் குணவர்த்தனா இரத்தினபுரிக்குவந்து நெஸ்பிறே இல்லை,பருப்பு இல்லை என ஓலமிடுகிறார். விவியன் போன்ற கொழும்பு வாழ் நாகரிக மக்களுக்குத்தான் நெஸ்பிறே தேவைப்படுகிறது. எம்மைப்போன்ற நாட்டுப்புற வாசிகளுக்கு நெஸ்பிறே தேவையில்லை.'' இவ்வாறு பட்டுகெதர என்னும் இடத்தில் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் வெலிமடை எம். பி. திரு. பேர்ஸி மரவீரா தெரிவித்தார்.

# ரூ. 20 ஆயிரம் மிச்சம்

நல்லூர், திங்கள்

கடந்த இரு மாதங்களில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மாதத்தில் 20 ஆயிரம் ரூபாய் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. புதிய வைத்திய அதிகாரி டாக்டர் எம். எஸ். சண்முகநாதனின் துரித நடவடிக்கைகளைத்தொடர்ந்தே இப்பணம் மிச்சப்படுத்தப்பட்டது. வெளியிலிருந்து மருந்துகள் வாங்கப்படுவதும், உணவுப்பொருட்கள் வீணாக வாங்கப்படுவது போன்றவை தவிர்க்கப் பட்டதைத் தொடர்ந்தே 20 ஆயிரம் ரூபாய் மிச்சப் படுத்தப்பட்டது.

## 42யாத்திரீகர்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

கச்சதீவுக்குச் சென்ற சில பிரயாணிகள் இங்கிருந்து ஆமைகளைக் கொண்டுசென்றதாகவும் ஒரு ஆமையின் வயிற்றுக்குள் மட்டும் சுமார் 100 ஒரு ரூபா வெள்ளி நாணயங்கள் கொண்டு செல்லப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர். இலங்கை ஒரு ரூபா வெள்ளிநாணயத்துக்கு இந்தியாவில் கிராக்கிஇருப்பதே இதற்குக் காரணம் எனவும் சொல்லப்படுகிறது. இங்கு சென்ற யாத்திரிகர்கள் நான்கு தினங்களும் கச்சதீவில் சூதாட்டத்திலீடுபட்டதாகவும் இங்கு கண்காணிப்பில் ஈடுபட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கச்சதீவுத் திருநாள்நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தபோதிலும்முப்படையினரும் பொலிசாரும் நேற்றுக்காலை இறுதிப்பரிசோதனைகளில் ஈடுபட்டனர். இரு விமானங்களும் நேற்றுக் மாலை 6 மணிக்கு கச்சதீவுக்குமேலும், கடலுக்கு மேலும் தாழப் பறந்து ரோந்து சுற்றியபின்னர் இரவு கொழும்பு திரும்பின. இங்கு அமைக்கப்பட்ட முப்படைப் பரிசோதனை நிலையங்கள் ஏழும் நேற்று இரவு 8 மணியுடன் அகற்றப்பட்டன.

கடந்த 5 தினங்களாகப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு வடபகுதியில் பலத்த கண்காணிப்பை ஏற்படுத்தியிருந்த போதும் எதிர்பார்த்த அளவு பலனை இது அளிக்கவில்லையென சம்பந்தப்பட்ட அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார். (கா .நி.)

## வடமாகாண...

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

ளிர் கல்லூரி] 2. டாக்டர் கந்தையா வெற்றிக் கிண்ணம்- எஸ். சுரேந்திரன் [யாழ். மத்திய கல்லூரி]

### தமிழ் பேச்சு

சிரேஷ்டபிரிவு: கணேசலிங்கம் கேடயம்- கே. சகுந்தலா [உடுப்பிட்டி மகளிர் கல்லூரி] முத்துக்குமாரு வெற்றிக்கிண்ணம்- பி. தணிகாசலம் [மானிப்பாய் இந்துக் கல்லூரி]

### சங்கீதம் (கோஷ்டி)

சிரேஷ்டபிரிவு:லேடி இராமநாதன் கேடயம்- [மாணவிகள்] அருணோதயா கல்லூரி கதிரவேற்பிள்ளை கேடயம்- [மாணவர்] ஸ்கந்தவரோதயா கல்லூரி.

### சங்கீதம் (கோஷடி)

கனிஷ்டபிரிவு: கந்தையா உபாத்தியாயர் கேடயம்- [மாணவிகள்] ஸ்கந்தவரோதயா கல்லூரி. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் கேடயம்- (மாணவர்) அருணோதயா கல்லூரி. பரம் ஞானகாரித்த வெற்றிக்கிண்ணம்- கே. யசோதா [கொக்குவில் இந்துக்கல்லூரி] — வாய்ப்பாட்டு

## இந்தி......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கச்சதீவுப் பிரச்னை பற்றி ஒரு அங்கத்தவர் கிளப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில், கச்சதீவு பற்றிய தஸ்தாவேஜுக்களைத் தமிழக அரசாங்கம், மத்திய அரசாங்கத்திடம் அனுப்பி வைத்துள்ளதாக முதல் மந்திரி தெரிவித்தார்.

கச்சதீவு விவகாரத்தை இந்திய மத்திய அரசின் வெளிவிவகாரப் பிரிவு பரிசிலனை செய்து வருவதாகத் திரு. அண்ணாதுரை மேலும் கூறினார்.

கச்சதீவு பிரச்னையில் சம்பந்தப்பட்ட இரு நாடுகளினதும் நலன் கருதி, அதை சபையில் விவாதிக்க வேண்டாம் என்று முதல் மந்திரி கேட்டுக் கொண்டார்.

# முதலமைச்சர்களின் சொத்து விபரம்

## தமிழகம் டில்லியுடன் கடிதத் தொடர்பு

சென்னை, மார்ச் 25

முதலமைச்சர்கள் தங்கள் உடமைகள்பற்றி பிரதம மந்திரிக்கோ அல்லது உதவி பிரதமமந்திரிக்கோஅறிவிக்க வேண்டும் என்றும் அவசியமானால் அவர்கள் முதல் அமைச்சர்களை விசாரிப்பார்கள் என்றும் மத்தியஅரசு தெரிவித்திருப்பதை தமிழக அரசு விரும்பவில்லை.

மாநில அரசைச் சேர்ந்த அமைச்சர்கள்தமதுசொத்து விபரங்களை முதல்அமைச்சர்களுக்கு அறிவிக்கவேண்டும் என்றும் விரும்பினால் அவர்களை விசாரிக்கலாம் என்றும், முதலமைச்சர்கள் தம் சொத்து விபரங்களை பிரதமமந்திரிக்கு அல்லது உதவிபிரதமமந்திரிக்கு அறிவிக்கவேண்டும் என்றும் மத்தியஅரசு தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக மத்திய அரசுடன் தமிழகஅரசு கடிதத்தொடர்பு கொண்டுள்ளதாக முதன்மந்திரி திரு. அண்ணாதுரை இன்று தமிழகசட்டசபையில் தெரிவித்தார்.

# கண் பரிசோதனை

## இலவசமாகச் செய்வார்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணநகரின் ஐந்தாம் வட்டாரத்தில் வாழும் கண் சம்பந்தமான நோய் உடைய ஏழைமக்களை இலவசமாகப் பரீட்சிப்பதற்கும் ஆலோசனை அளிப்பதற்கும், கண்ணாடி அணியவேண்டுமானால் அதற்கான விபரச்சீட்டை இலவசமாக அளிப்பதற்கும் கண்வைத்திய நிபுணர் எஸ். ஆனந்தராஜனுடன் அவருடையஉதவியாளரும் இணங்கியுள்ளார்கள்.

இவர்களுடைய சேவையை இலவசமாகப்பெற விரும்புவோர் ஏப்பிரல் மாதம 4-ந்திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் கொழும்புத்துறைச் சந்தைக்கு அண்மையாக இருக்கும். கொழுபித்துறை சனசமூகநிலையத்தில் இவர்களைச் சந்திக்கலாம்.

இவர்களின் இலவசசேவை ஒவ்வொரு மாதமும் 4-ந்திகதிகளில் ஏனைய வட்டாரங்களில் நடைபெறும்.

# கடத்தப்பட்ட சிறுவன் பொலிஸ் நிலையத்தில் புகார்

வவனியா, திங்கள்

நான்கு மாதங்களாக மறைத்து வைக்கப்பட்டிருந்த எட்டுவயதுச் சிறுவன், தப்பிச்சென்று பொலிஸ் நிலையத்தில் புகாரிசெய்த சம்பவம் இங்கு நடந்துள்ளது. சகோதரியின் காதல் விவகாரம் அம்பலமாகிவிடும், என்ற காரணத்தினாலேயே இச்சிறுவன் மறைத்து வைக்கப்பட்டான் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

கண்டியிலிருந்து 16 மைல்களுக்கப்பாலுள்ள வத்தகல என்ற இடத்தைச் சேர்ந்த வி. ராஜேந்திரா என்ற இச்சிறுவன் காரில் கடத்தப்பட்டுவந்து, பாவற்குளத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்தானென்று கூறப்படுகிறது.

தனது தந்தையின் பெயர் வேலு என்றும், தாயார் பெயர் வள்ளியென்றும், அச்சிறுவன் புகாரில் தெரிவித்திருக்கிறான்.

தனது சகோதரியான தெய்வானையின் குடும்ப நண்பரான ஒருவர், அடிக்கடி, சகோதரியை சந்திப்பதாகவும், சம்பவ தினம் தன்னை பயமுறுத்தியதாகவும் சிறுவன்புகாரில் மேலும் கூறியுள்ளான்.

வவனியா சப் இன்ஸ்பெக்டர் திரு. டேவிட் பெரேரா விசாரணை செய்துவருகிறார்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில், 3-ம் திருவிழாவாகிய இன்று மாலை 6 மணிமுதல் இரவு 7-30 மணிவரை நல்லை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் சம்பூர்ணஇராமாயணக் கதாப்பிரசங்கத் தொடரில் ''பரதன் துறவு'' என்னும் பொருள்பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், பின் சுவாமி மூஷிக வாகனத்தில் வீதி வலம் வருதலும், இரவு 10 மணிக்கு அர்த்தஜாமப் பூசையும் நிறைவேறும்.

## திருநாள்

யாழ்ப்பாணம், செவ்

தெற்குத்தீவு புனித யூதாதேயுவின் திருநாள் எதிர்வரும் 17-ந்திகதி ஆரம்பமாக இருக்கின்றது. சித்திரை மாதம் 25-ம் திகதி மாலை திருச்சுருப சுற்றும் பிரகாரமும் 26-ம் திகதி காலை வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் நடாத்தப்படும் திருநாள் பூசையும் நடாத்தப்படும்.

## மிளகாய் செடிகளில் நோய்

சங்கானை, திங்கள்

மிளகாய் நாற்றுத் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் பலகஷ்டத்திற்குள்ளாகியும் மிளகாய்ச் செய்கையில் அக்கறைகொண்டுள்ள விவசாயிகளின் மிளகாய்ச் செடிகளை ''பூஞ்சணவன்'' என்னும் நோய் பிடித்துள்ளது. இந்நோயால் சண்டிலிப்பாய் மாதகல் சங்கானை ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகள் பெரிதும்பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நோயைத்தடுப்பதற்கு கமத்தொழில் விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## காங்கேசன்துறை துறைமுகம்

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறை இறங்குதுறைமுக வேலை ஒரு வருடகாலமாகியும் இன்னும் பூர்த்தியாகவில்லை. சென்ற வருடம் காங்கேசன்துறையில் கப்பல்கள் வந்து கொண்டிருந்த பொழுது துறைமுக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. சென்றவருடக் கடைசியில்வீசிய புயலினால் இவ்விறங்கு துறைமுகம் முற்றாக சேதமுற்றது குறிப்பிடத்தக்கது. சென்றமாதம் திரும்பவும் துறைமுக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வேலையை அரசினர் என்ஜினியரிங் காப்பரேஷன் பொறுப்பேற்றுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org